## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

01.06.2019 மறைச்சாட்சியான புனித ஜஸ்டின் - திருப்பலி 02

02.06.2019 ஆண்டவரின் விண்ணேற்புப் பெருவிழா - திருப்பலி 03

08.06.2019 அருளாளர் ஸ்தேவான் சாண்டோர் நினைவு - திருப்பலி 04

09.06.2019 தூய ஆவி பெருவிழா - திருப்பலி 05

11.06.2019 பர்னபா திருத்தூதர் - திருப்பலி 06

12.06.2019அருளாளர் பிரான்சிஸ் கெசியான்டு கோ - திருப்பலி 08

13.06.2019 பதுவை நகர் புனித அந்தோணியார் - திருப்பலி 09

16.06.2019 மூவொரு கடவுள் பெருவிழா - திருப்பலி 10

23.06.2019 திருவுடல் திருஇரத்தப் பெருவிழா - திருப்பலி 11

24.06.2019 புனித திருமுழுக்கு யோவான் பிறப்புப் பெருவிழா-திருப்பலி 13

27.06.2019 அலெக்சாந்திரியா நகர் புனித சிரில் - திருப்பலி 14

28.06.2019 திரு இருதயப் பெருவிழா - திருப்பலி 15

29.06.2019 புனிதர்கள் பேதுரு, பவுல் திருத்தூதர் பெருவிழா - திருப்பலி 17

## பகுதி 2: விசுவாசத்தில் வளர...

1. திருஇருதயம் தரும் பாதுகாப்பு 20
2. இன்று தூய ஆவியும் நானும் 22
3. புனித ஜோசப் கஃபாசோ வாழ்வு - நமக்கு தரும் பாடம் 25
4. திருச்சபைச் செய்திகள் 27

## பகுதி 1: வழிபாட்டு வழிக்காட்டி

## 01.06.2019 மறைச்சாட்சியான புனித ஜஸ்டின் திருப்பலி

**முன்னுரை**

திரு. டே. ஆக்னல் ஜோஸ்

அழைக்கப்பட்டவர்களே, இன்று நாம் மறைச்சாட்சியான புனித ஜஸ்டின் விழாவைக் கொண்டாடுகிறோம். இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த மெய்யியலாளரான ஜஸ்டின், வாழ்வின் கேள்விகளுக்கு கிறிஸ்தவமே சரியான விடைகளைத் தருவதாக உணர்ந்து மெய்மறையைத் தழுவினார். கிரேக்க மெய்யியல் அடிப்படையில் இவர் வழங்கிய விளக்கங்கள், கிறிஸ்தவ நம்பிக்கைகளைப் பற்றியத் தெளிவான புரிதல் ஏற்பட வழிவகுத்தன. கிறிஸ்தவ சமயத்தின் விசுவாச உண்மைகளுக்குச் சிறந்த காப்புரையாளராக இவர் விளங்கினார். திருஅவையின் தந்தையர்களில் ஒருவரான புனித ஜஸ்டின், இறைமகன் மனிதரானதில் கன்னி மரியாவின் பங்கை அழகிய முறையில் எடுத்துரைத்துள்ளார். வேற்று தெய்வங்களுக்குப் பலியிடுமாறு வற்புறுத்தப்பட்ட வேளையில், "ஆண்டவர் இயேசுவுக்காகத் துன்புறுவதே எனது விருப்பம். அதன் வழியாகவே நான் மீட்படைவேன்" என்று கூறி அவர் தமது உயிரைக் கையளித்தார். மறைச்சாட்சியான புனித ஜஸ்டினைப் பின்பற்றி, கிறிஸ்தவ விசுவாசத்துக்காக உயிரை இழக்கவும் துணிவுபெறவும் வரம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. வாழ்வு தருபவரே இறைவா, எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் கிறிஸ்தவப் பொதுநிலையினரின் விசுவாசத்தை உறுதிப்படுத்தும் சாட்சிகளாகத் திகழ வரமருளுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
2. மீட்பு வழங்குபவரே இறைவா, எம் நாட்டு மக்கள் அனைவரும் உண்மைக் கடவுளாகிய உம்மை அறிந்து ஏற்றுக்கொள்ளும் வகையில், நாங்கள் அனைவரும் உமக்குச் சாட்சிகளாக வாழ உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
3. மாட்சி அளிப்பவரே இறைவா, நாங்கள் அனைவரும் கிறிஸ்தவ விசுவாசத்தில் நாளும் வளர்ச்சி காணவும், உமது மேன்மைக்குச் சான்று பகரும் வகையில் உயிரையும் கையளிக்கத் துணிவும் தருமாறு உம்மை மன்றாடுகின்றோம்.

## 02.06.2019 ஆண்டவரின் விண்ணேற்புப் பெருவிழா திருப்பலி

**முன்னுரை**

திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. திப. 1:1-11 II. எபி. 9: 24-28,10:19-23 லூக் 24: 46-53

இறை இயேசுவில் அன்புக்குரிய சகோதர சகோதரிகளே, ஆண்டவரின் விண்ணேற்புப் பெருவிழா திருப்பலிக் கொண்டாட்டத்தில் கலந்துக்கொள்ள திருஅவை நம்மை மகிழ்வுடன் அழைக்கிறது. புனித லூக்கா இயேசுவின் விண்ணேற்றத்தோடு நற்செய்தியை நிறைவு

செய்கிறார். இயேசு கிறிஸ்து மண்ணுலகப் பணியை நிறைவு செய்து விண்ணகப் பணியைத் தொடங்குவதற்கு விண்ணகம் செல்கிறார். இயேசு உயிர்த்தப்பின் 40 நாட்கள் தன்னுடைய திருத்தூதர்கள் தூய ஆவியைப் பெற்றுக்கொள்ளத் தயார் செய்தார். இயேசு தனது கரங்களை உயர்த்தி தம் அன்புச் சீடர்களை ஆசீர்வதித்து நற்செய்தியை உலகெங்கும் அறிவிக்கும் பணியைத் திருத்தூதர்களிடம் ஒப்படைத்தார். இயேசு கிறிஸ்து திருத் தூதர்களுக்கு மட்டுமன்று, நம்மையும் தூய ஆவியாரின் துணைக்கொண்டு நற்செய்தியை அறிவித்து, சான்று வாழ்வு வாழ அழைக்கிறார். இயேசு கிறிஸ்து தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றி இவ்வுலகப் பணிவாழ்வை முடித்து வெற்றி வீரராய், விண்ணகம் சென்றார். இன்றைய தினம் நாமும் இயேசு கிறிஸ்துவைப்போல நம்முடைய கடமைகளை நிறைவேற்றி விண்ணகம் செல்ல அழைக்கப்படுகிறோம். நமது முக்கியமான கடமை என்னவென்றால் தன்னைத்தான் அன்பு செய்வதுபோல் பிறரையும் அன்பு செய்து வாழ்வோம். அவ்வாறு அன்பு செய்து வாழும்போது நாமும் விண்ணேற்றம் அடைவோம் என்ற நம்பிக்கையோடு இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. உங்களுக்கு அமைதி உரித்தாகுக என்று கூறிய அமைதியின் ஆண்டவரே, எங்களுடைய திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், நம்பிக்கையாளர்களின் உள்ளங்களில் உயிர்த்த ஆண்டவர் வழங்கும் அமைதி, சமாதானம் என்றென்றும் தங்கியிருக்கவும், திரு அவையை அமைதியான வழியில் தூய ஆவியாரின் துணைக்கொண்டு வழி நடத்திடவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பினால் எம்மை ஆளும் ஆண்டவரே, நாட்டையாளும் தலைவர்கள், ஆட்சியாளர்கள் நீர் எவ்வாறு மக்களை அன்பு செய்தீரோ அதேபோல் உமது வழியில் எங்களை அன்புடனும் பரிவுடனும் ஆட்சி செய்திட வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. நல்வாழ்வு நல்கும் இறைவா, தீய பழக்கங்களுக்கு அடிமையாகி இருக்கும் மனிதர்களின் குடும்பத்திற்காகவும், அவர்களின் உறவினர்களுக்காகவும் மன்றாடுகிறோம். மன நிம்மதியைத் தொலைத்து விட்டு, விடிவு வராதா என்ற ஏக்கத்துடன் வாழ்பவர்களுக்கு துணையாய் இருந்தருளும். தீய பழக்கங்களிலிருந்து விடுபட்டு, உறவுகள்மீது அன்பு செலுத்துபவர்களாய் வாழ வரமருள வேண்டுமாறு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. வாய்ப்புகளை வழங்கிடும் இறைவா, வேலைத் தேடி அலைந்துக்கொண்டிருக்கும் எண்ணற்ற இளையோருக்கு நல்ல வேலை கிடைத்திடவும், அந்த வேலையின் மூலம் தங்களது குடும்பத் தேவைகளைநிறைவேற்றவும், வாழ்வில் வரும் பிரச்சனைகளைச் சந்திக்கும் ஆற்றல் பெற்றவர்களாய் வாழவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 08.06.2019 அருளாளர் ஸ்தேவான் சாந்தோர் நினைவு திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜான் அலெக்ஸ்

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, இன்று நாம் அருளாளர் ஸ்தேவான் சாந்தோர் அவர்களின் விழாவைச் சிறப்பிக்கின்றோம். இவர் ஹங்கேரியில், இளையோர் பணியில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வறுமையில் வாடிய இளையோரைக் கண்டெடுத்து அவர்களுக்கு அச்சுத் தொழிலைக் கற்றுக்கொடுத்து வாழ்வில் முன்னேற வழிசெய்தார். இதனால் கம்யூனிஸ்ட் ஆட்சியாளர்களால் கைது செய்யப்பட்டு இரகசியமாக ஓரிடத்தில் அடைக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டார். 1914ல் பிறந்த இவர், பட்டயப்படிப்புப் பயின்றவர். எப்போதுமே தனது நண்பர்களுடன் சேர்ந்து இளையோரைச் சுற்றியே காணப்பட்டார். பிரான்சிஸ்கன் திருத்தலத்தில் தினமும் திருப்பலிக்கு உதவி செய்வார். ஒருநாள் அங்கிருந்த சலேசிய மாத இதழைப் படிக்க நேர்ந்தது. தொன் போஸ்கோவைப் பற்றிய செய்திகளைப் படித்த சாந்தோர், சலேசிய வாழ்வு முறையினால் ஈர்க்கப்பட்டார். தனது ஆன்ம குருவின் வழிகாட்டுதலின்படி தன்னுடைய குடும்பத்தினரின் அனுமதியைப் பெற்று 1936ல் சலேசிய சபையில் தன்னை இணைத்துக் கொண்டார்.

தொன் போஸ்கோவின் முறையில் தனது செயல்களை வகைப்படுத்தி, "பிரிண்டிங்" என்ற அச்சுத் தொழிலில் வல்லுநரானார். 1940ல் தனது முதல் வார்த்தைப்பாட்டினை மேற்கொண்டார். அதுமுதல் சலேசிய பள்ளிகளில் தொழிற்கல்வி பயிற்சியாளராகவும் பின்னாளில் இளையோர் குழுக்களுக்குப் பொறுப்பாளராகவும் பணியாற்றினார். 2ம் உலகப் போரின் முடிவில், சகோ. சாந்தோர், மீண்டும் சமுதாய முன்னேற்றத்திற்காக, குறிப்பாக இளையோர்களின் நலனில் முழு ஈடுபாட்டுடன் பணியாற்றினார். சலேசிய அச்சுப் பயிலகத்தில் பணியில் இருந்த சகோ. சாந்தோர் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக தவறான குற்றச்சாட்டுக்கு ஆளாகி கைது செய்யப்பட்டது முதல், எங்கு எப்படி இருக்கிறார் என்ற தகவல் ஏதுமில்லாமல் போயிற்று. காலப்போக்கில் கம்யூனிஸ்ட் ஆட்சி அகற்றப்பட்டு வீழ்ச்சியடைந்த பிறகே அவர் மத போதக நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு 1953ல் ஜூன் 8ம் நாள் இரகசியமாக ஓரிடத்தில் வைத்து தூக்கிலிடப்பட்ட விவரம் தெரிய வந்தது.

இறைப்பணிக்காக தனது உயிரைக் கொடுத்து மறைச்சாட்சியாக மாறிய அருட் சகோதரரை 19 அக்டோபர் 2013ல் அருளாராக திருஅவை உயர்த்தியது. இவருடைய வாழ்வு இன்றைய நற்செய்திக்கேற்ப நமக்குச் சான்றாக இருப்பதை நாம் பார்க்கின்றோம். அதாவது இருவித பணிகளை நமக்குச் சொல்கிறது. ஒன்று இயேசுவின் வருகையை எதிர்நோக்கி அனைவருக்காகவும் அனைத்திற்காகவும் செபிப்பது, மற்றொன்று நற்செய்தியை அறிவிப்பது. சிறப்பாக இன்று நாம் நினைவு கூறும்

அருளாளர் ஸ்தேவான் சாந்தோர் போன்று இறைப்பணிக்கென தங்களை அர்ப்பணித்து வாழ்வோருக்காக இத்திருப்பலியில் மன்றாடி செபிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நம்பிக்கையின் திருஉருவே இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகளுக்காக மன்றாடுகிறோம். உள்ளமும் செயலும் நன்மையைக் கனியாக ஈந்தால்தான் முழுமையாக மனிதம் மலர்கிறது என்பதை அவர்களின் வாழ்வின்மூலம் நாங்கள் அறிந்து மனிதம் மலரும் இடத்தில் புனிதம் மணம்வீசும் என்பதற்கிணங்க எங்கள் வாழ்வை அமைத்துக்கொள்ள வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. நன்மையின் நாயகனே இறைவா, எங்கள் வாழ்வில் சந்திக்கும் துன்பப்படுவோரின் துயரையும் தனிமையில் ஏங்குவோரின் தனிமையையும் நீக்கவும், அன்புச் செய்யப்படாதவர்களை அன்பு செய்யவும் அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பின் இறைவா, வெறுப்புக்கும் வன்முறைக்கும் இலக்கானோர் தங்கள் வாழ்வில் உம்முடைய உடனிருப்பை உணரவும், உமது அன்னையின் பராமரிப்பை அனுபவிக்கவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 09.06.2019 தூய ஆவி பெருவிழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிவில்சன்

I. திப 2: 1-11 II. உரோ 8: 8-17 யோவா 14:15-16, 23-26

"புதுப்பிறப்பு அளிக்கும் நீரினாலும் புதுப்பிக்கும் தூய ஆவியாராலும் கடவுள் நம்மை மீட்பார்" (தீத்து 3:5)

அன்பு இறைமக்களே, உலகில் உண்மை-பொய், இருள்-ஒளி, நன்மை-தீமை, தீய ஆவி-தூய ஆவி என இருதுருவங்கள் நிலைகொண்டு உள்ளன. மனிதர்களாகிய நாம் பல வேளைகளில் இவ்விரண்டிற்கும் இடையேயுள்ள வேறுபாடுகளைக் குறித்து சிறுதும் பொருட்படுத்தாமல் மனம் போன போக்கிலேயே வாழ்ந்து வருகிறோம். நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவோ மனிதனாக மனுஉருவெடுத்திருந்தாலும் முழுமையாக தூய ஆவியாரால் ஆட்கொள்ளப்பட்டு சோதனைகள், சவால்கள், துன்பங்கள் நெருக்கடிகள் பல வந்தபோதும் சிறிதும் மனம் தளராமல் இறைத்திருவுளம் நிறைவேற்றினார்.

தன் இறப்பிற்குப் பிறகு திருத்தூதர்களும் அவரைப் போலவே தூய ஆவியாரால் வழிநடத்தப்படும்படி ஒருமித்து செபிக்கவும் கற்றுத் தந்தார். ஐம்பதாம் நாளில் தூய ஆவியாரைப் பெற்றவுடனே திருத் தூதர்கள் புதுப் படைப்பாக மாறி, புத்துயிர் பெற்றனர். இயேசுவின் புரட்சி வீரர்களாக எருசலேம் மட்டுமல்லாமல், உலகம் முழுவதும் அவரது போதனைகளைப் பறைச்சாற்றி மக்களை இயேசுவின்பால் ஈர்த்தனர். தூய

ஆவியாரின் துணையால் அவர்கள் அனுபவித்த வேதனைகள், துன்பங்கள் மத்தியிலும் நம்பிக்கையில் சிறிதும் பிறழாமல் நற்செய்தியை அறிவித்து மறைச்சாட்சிகளாக இரத்தம் சிந்திப் புனிதர்களாக நம் மத்தியில் இன்றும் வாழ்கின்றனர்.

இன்று நாமும் அருளடையாளங்கள் வழியாக அதே தூய ஆவியாரைப் பெறுகிறோம். ஆனால் அத்தூய ஆவியாரின் குரலுக்குச் செவிகொடுத்து அன்றாட வாழ்வில் அவர் நம்மை இயக்க அனுமதிக்கின்றோமா? திருத் தூதர்களிடம் உருவான நற்செய்தியின் தாகம் நம்மிலும் உருவாகட்டும். தூய ஆவியார் நம்மை இயக்கி அழைத்துச் செல்லும் பாதையில் துணிவுடன் பயணிப்போம். இவ்வாறு இறைத்திருவுளம் பணிவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, எம் திருஅவையின் தலைமை பீடத்தில் உமது பிரதிநிதியாக செயல்பட்டு வரும் அன்பு திருத்தந்தைக்காக நாங்கள் மன்றாடுகிறோம். அன்று திருத்தூதர்களுக்குக் கொடுத்த தூய ஆவியாரின் தைரியத்தை அவருக்கும் அளித்து திருஅவை புனிதத்தை நோக்கிப் பயணிக்க அவர் எடுக்கின்ற அனைத்து முயற்சிகளும் வெற்றிபெற அருள் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. இயக்கும் தூய ஆவியாரே, நற்செய்தி அறிவிக்கும் அனைத்து பணியாளர்களையும் உம் பாதம் ஒப்புக்கொடுத்து மன்றாடுகிறோம். மக்களை உண்மையான ஆன்மீக வழியில் ஒன்று சேர்த்து இறை இயேசுவின் இறையாட்சிக் கனவை நனவாக்க தூய ஆவியாரின் வல்லமையைப் பொழிந்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. உண்மையில் வழிநடத்தும் தூய ஆவியாரே, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அரசு செம்மையான பாதையில் செயல்பட்டு மக்கள் நலன்காக்கும் அரசாகச் செயல்பட நீர் துணைபுரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. திடப்படுத்தும் தூய ஆவியாரே, உயர்வு தாழ்வு என்ற வித்தியாசம் இல்லாமல் அன்று தூய ஆவியாரைப் பெற்ற மக்கள் அனைத்தையும் பகிர்ந்து ஒருமித்து வாழ்ந்தது போல் இன்றும் சமூக அநீதிகள் மறைந்து ஒற்றுமையோடு வாழ அருள் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 11.06.2019 பர்னபா திருத்தூதர் திருப்பலி

**முன்னுரை**

திருமதி. பத்மாவதி

இன்று திருத்தூதர் பர்னபா அவர்களின் விழாவை திருஅவை சிறப்பிக்கின்றது. பர்னபா என்றால் "ஆறுதலின் மகன்", "உற்சாகத்தின் மகன்," "ஊக்குவிக்கும் பண்பாளன்" என்பது பொருள். சவுல் மனம்மாறிய பின் பர்னபாதான் அவரை எருசலேமில் திருத்தூதர்களிடம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தினார் (திப. 9:27). அந்தியோக்கியாவில் திருத்

தூதர்கள் நோன்பு இருந்து ஆண்டவரிடம் மன்றாடிய போது "பர்னபாவையும் சவுலையும் ஒரு தனிப்பட்ட பணிக்காக நான் அழைத்திருக்கிறேன் அந்த பணிக்காக அவர்களை ஒதுக்கி வையுங்கள்" என்று தூய ஆவியார் அவர்களுக்கு உரைக்க, இருவரின் தலைமீதும் தங்கள் திருக்கரங்களை வைத்து திருப்பொழிவு செய்து திருப்பணியில் அமர்த்தி, அவர்களை அனுப்பி வைத்தார்கள் (திப 13:1-3).

பர்னபா மாற்குவைக் கூட்டிக்கொண்டு சைப்பிரசுக்குச் சென்றார். அங்கு நற்செய்தி அறிவித்து கல்லால் எறியப்பட்டு 64ம் ஆண்டு இறந்தார். பன்னிரு திருத்தூதர்களுள் ஒருவராக இல்லாதபோதும் பவுலைப்போலவே பர்னபாவும் திருத்தூதர் என்றே அறியப்படுகிறார். இத்திருப்பலியில் நாமும் பர்னபாவைப்போன்று தளராத உழைப்பும், குறையாத ஆர்வமும் உடைய பணியாளர்களாக நற்செய்திக்குச் சான்று பகர நல்ல மன உறுதியைத் தரும்படி இறைவனை மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல இறைவா, உம்மால் திருப்பொழிவு செய்யப்பட்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் அனைவரையும் உமது தூய ஆவியாரின் ஆற்றலால் வழிநடத்தி எந்தவொரு தீமையும், அவதூரும் அணுகாது காத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்புத் தந்தையே இறைவா, திருத்தூதர் பவுல் கூறியதுபோல் நாங்கள் துன்புறுகிறோம் என்றால் அது உங்கள் ஆறுதலுக்காகவும் மீட்புக்காகவும் தான் என்பதற்கிணங்க எங்கள் துன்ப துயரங்களைத் தளராமனதுடன் ஏற்றுக்கொண்டு மனஉறுதியுடன் மீட்பின் பாதையை அடைய எங்களுக்கு வரமருளுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. படைப்பின் பரம்பொருளே இறைவா, உலக மக்கள் அனைவருக்கும் பொதுவான போதனையான மலைப்பொழிவை கிறிஸ்தவர்களாகிய நாங்கள் கட்டாயம் பின்பற்றி கிறிஸ்துவை பறைசாற்றிடும் சீடராக வாழ வழிநடத்தும்படி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 12.06.2019 அருளாளர் பிரான்சிஸ் கெசியான்டு கோ திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

நமது திருஅவை இன்றைய நாளில் அருளாளர் பிரான்சிஸ் கெசியாவையும் அவரது தோழர்கள், எட்வர்டு, கலிரினிக், ஜாரோக்னியு, சீஜெஸ்லா, ஜோவேய்க், எட்வர்டு கஸ்மியர்ஸ் ஆகியோரையும் நினைவு கூறுகின்றது. அருளாளர் பிரான்சிஸ் கெசி 1920ம் ஆண்டு பெர்லின் நகரில் பிறந்து தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்த வேளையில் இளையோர் அணி ஒன்றில் இணைந்து மகிழ்வுடன் சேவை புரிந்து வந்தார். தினமும் செபமாலை செபிப்பது, நற்கருணை உட்கொள்வது ஆகியவற்றில் உறுதியாக இருந்தார். 1939ல் இரண்டாம் உலகப்போர் மூண்டபொழுது

சலேசிய இளையோர் மையம், ஜெர்மானிய வீரர்களால் கைப்பற்றப்பட்டு, 1940ல் அருளாளர் பிரான்சிஸ் கெசியும் அவரது தோழர்களும் சிறைப் பிடிக்கப்பட்டனர். சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் அங்கும் தங்களது செபங்களையும், வழிபாட்டுக் கொண்டாட்டங்களையும் விடாது கடைப் பிடித்தனர். முதிர்வடைந்த சிறைவாசிகளிடம் அன்பு கொண்டு அவர்களுக்குச் சேவை செய்தனர்.

1942 ஆகஸ்டு 24அன்று இட்லரின் ஆட்சியில் தேச துரோகிகளாக குற்றம் சாட்டப்பட்டு வேதசாட்சிகளாக உயிர் துறந்தனர். அவர்கள் இறந்தபோது அவர்களின் வயது 23க்கும் குறைவாகவே இருந்தது. 1999ல் திருத்தந்தை இரண்டாம் ஜான்பால் அவர்கள் அருளாளர் பட்டம் வழங்கினார்கள். இளம் வயதுமுதல் இறைவனிடம் இவர்கள் கொண்ட இறைபக்தியையும், இறைவனுக்காக இன்னுயிர் துறந்த இவர்களின் மனஉறுதியையும் மனதிலிருத்தி இத்திருப்பலியில் இணைவோம், இறையனுபவம் பெறுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. திருஅவையின் நாயகனே இறைவா, திருஅவையை நலமுடன் வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் ஆகிய அனைவரும் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி ஏழை எளியோருக்கு நல் உள்ளத்துடன் பணிபுரியும் தாராள மனதைத் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பே உருவான இறைவா, அருளாளர் பிரான்சிஸ் கெசி மற்றும் அவரது நான்கு தோழர்களைப் போன்று, நாங்களும் சேவை மனப்பான்மையிலும், ஒற்றுமையிலும், அன்பு செலுத்துவதிலும், துன்பங்களைக் கண்டு சளைத்து போகால் வாழ அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
3. வழிநடத்தும் தலைவரே எம் இறைவா, எம் தேசத்தை ஆட்சி செய்துவரும் தலைவர்கள், தேசமக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் சிறந்த திட்டங்களை உருவாக்கி மக்களுக்காக உழைக்க அவர்களுக்கு நல்ல மனதினைத் தந்தருளும்படி உம்மை மன்றாடுகிறோம்.

## 13.06.2019 பதுவை நகர் புனித அந்தோணியார் திருப்பலி

**முன்னுரை**

திருமதி. டிலைலா சேவியர்

கோடிப்புதுமை அற்புதர் என்று போற்றப்படும் இப்புனிதர் போர்த்துக்கல் நாட்டில் லிஸ்பன் நகரில் பிரபு குலத்தில் பிறந்தவர் இவர். தன்னுடைய 15 வயதில் அகஸ்டினியன் துறவியானார். கி.பி. 1220ல் மொராக்காவில் பிரான்சிஸ்கன் துறவிகளின் தியாக வாழ்வு, கிறிஸ்துவுக்காக குருதி சிந்தி உயிர் துறந்ததைப் பார்த்தப் பிறகு தாமும் இத்துறவிகளைப்போல இயேசுவுக்காகக் குருதி சிந்த வேண்டும் என்ற

தணியாத தாகத்தால், கப்புச்சின் சபையில் சேர்ந்தார். இப்புனிதர் சிறுவயது முதற்கொண்டே இறைவனின் துணையோடு பல புதுமைகளை செய்து வந்தார். உயிரற்ற தாவரங்கள் செழித்து வளர்தல், ஆழ்கடல் மீன்கள் இவரின் மறையுரையைக் கேட்க கடற்கரை அருகில் வருதல், ஐந்தறிவுள்ள கழுதை திவ்விய நற்கருணையின் முன் முழந்தாலிட்டு வணங்குதல், பிசாசுகளை விரட்டுதல், இறந்தவர்களுக்கு உயிர் கொடுத்தல் போன்ற எண்ணற்ற புதுமைகளை இறைத் துணையோடு செய்தார்.

குறிப்பாக குழந்தை இயேசுவை தன்னுடைய கரத்தில் ஏந்திய பெருமைக்குரியவர். காணாமற்போன பொருட்களைக் கண்டுப்பிடிக்க அநேகர் இவரின் உதவியை சமய பாகுபாடுகளை கடந்து அண்டி வருகின்றனர். இறைவனைப் பற்றியே அல்லும் பகலும் சென்ற இடமெல்லாம் வாழ்நாளெல்லாம் போதித்த இவரின் நாவை இறைவன் ஆசீர்வதித்து "அழியா நாவுடைய" புனிதராக இவரை உயர்த்தியுள்ளார். இப்புனிதரின் நம்பிக்கையையும், பாதுகாப்பையும் பெற்றிட இத்திருப்பலியில் பங்குகொள்வோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் இறைவனின் துணையோடு, தூய ஆவியாரின் வல்லமையைப் பெற்று தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட திருஅவையை தூய வழியிலும், புனித நெறியிலும் வாழ வழிநடத்திட வல்லமையைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பே உருவான இறைவா, நாங்கள் உம்மிடம் பெற்றுக்கொண்ட அனைத்து கொடைகளையும் எங்களுக்கென்று வைத்துக்கொள்ளாமல் பிறரின் நலனுக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் பகிர்ந்தளிக்கும் தியாக உள்ளத்தை எங்களுக்குத் தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. தூய்மையின் இருப்பிடமான இறைவா, புனித அந்தோணியாரின் திருவிழாவைச் சிறப்பிக்கும் நாங்கள் இறைவார்த்தை, திவ்விய நற்கருணை இவற்றின் மகிமையை அறிவிக்க எங்களுடைய நாவினை பயன்படுத்தும் நல்ல மனதைத் தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 16.06.2019 மூவொரு கடவுள் பெருவிழா திருப்பலி

**முன்னுரை**

திரு. D.V.R. ராஜா

I. நீதி 8: 22-31 II. உரோ. 5: 1-5 லூக். 4: 1-13

அன்பு இறைமக்களே, நமது திருஅவையானது இன்று மூவொரு கடவுளின் பெருவிழாவைக் கொண்டாடுகிறது. தந்தை, மகன், தூய ஆவியார் என முப்பரிமாணங்களில் ஒரே இறைவனாக, ஒருமித்த சிந்தனை, ஒரே வல்லமை, ஒரே செயல்திறனோடு துவக்கமும் முடிவுமில்லாமல்

இயங்கி நம் அனைவருக்கும் மீட்பை உறுதி செய்கின்றனர் என்பது நாம் அறிந்ததே. தொடக்க காலத்தில் தந்தையாம் கடவுள் மனிதரோடும் இறைவாக்கினரோடும் பல்வேறு வழிகளில் உரையாடி உறவு கொண்டிருந்தார். பின்னர் பாவத்தையும் அதன் விளைவாக உண்டான மரணத்தையும் வென்றெடுக்க தமது ஒரே மகன் இயேசுவை மனுவுருவாக்கி, பாடுபட்டு, உயிர்ப்பித்து, தம் வலப்பக்கம் அமரச் செய்தார். அவரைத் தொடர்ந்து இந்நாளில் நமக்குத் துணையாளராக தூய ஆவியாரை அனுப்பி நம்மை தேற்றிடச் செய்தார்.

இவ்வாறு தூய ஆவியாரின் வழியாய் மகனும், மகன் வழியாய் தந்தையும் இடைவிடாமல் மாட்சி பெறுகின்றனர் என்னும் மறைபொருளை இந்நாளில் அறிகின்றோம். இப்பெருவிழாவில் மூவொரு கடவுள் ஒன்றித்துச் செயல்படுவதுபோல நாமும் நமது குடும்பங்களிலும், சமூகத்திலும் ஒற்றுமையுடன் இணைந்து வாழ்ந்து இறைவனை மாட்சியுறச் செய்து இறையரசைக் கட்டி எழுப்பி இவ்வாறு நம் மீட்பை பெற்றுக் கொள்ள அருள் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. **திருத்தந்தைக்காக:** அன்பான இறைவா, திருஅவையின் தலைவரும் வழிகாட்டியுமான எம் திருத்தந்தையின் உடல் நலனைப் பாதுகாத்து, உமது வழிநடத்துதலில் இறைப்பணியைச் சிறப்பாய் தொடரவும், அமைதியை விதைக்கும் பணியில் வல்லமையையும், ஞானத்தையும், நல்கி திருத்தந்தை மற்றும் துறவறத்தார் அனைவரையும் வழிநடத்த வேண்டுமென்று மூவொரு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. **பங்கு மக்களுக்காக:** இரக்கமுள்ள இறைவா, எம் பங்கு மக்கள் அனைவரும் நம்பிக்கை வாழ்வில் நிலைத்து நின்று தங்களையும் தங்கள் குடும்பங்களையும் பாதுகாத்துக்கொள்ளவும், எவ்வித இடர்பாடுகள் வந்தாலும் நம்பிக்கை வாழ்வில் துணிந்து நிற்கவும் உமதாசீரை அளிக்க வேண்டுமென்று மூவொரு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. **இளையோருக்கு:** கருணையுள்ள இறைவா, இளையோர் தங்களின் கடமையையும், பெற்றோரின் கனவினையும் மனதில் கொண்டு வாழ்ந்திடவும், அவர்கள் விரும்பியத் துறையில் உயர்கல்வியும் பணிகளும் இறைவன் தாமே நல்கிடவும் வரமருள வேண்டுமென்று மூவொரு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. **ஆட்சியாளர்களுக்காக:** பரிவுள்ள இறைவா, எங்கள் நாட்டையாளும் அரசியல் தலைவர்களுக்காக மன்றாடுகின்றோம். இவர்கள் மக்களின் நலனை மட்டுமே மனதில் இருத்தி, சுயநலமற்ற திட்டங்களை நிறைவேற்றிட அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

## 23.06.2019 திருவுடல் திருஇரத்தப் பெருவிழா திருப்பலி

**முன்னுரை**

திரு. செபாஸ்டின்

I. தொநூ. 14: 18-20 II. 1கொரி 11:23-26 லூக். 9: 11-17

கிறிஸ்துவில் நம்பிக்கைக் கொண்ட சகோதர சகோதரிகளே, இன்று இயேசுவின் திருவுடல் திரு இரத்தப் பெருவிழாவினைக் கொண்டாடுகிறோம். கத்தோலிக்க திருஅவையின் ஒப்பற்ற தனிப்பெரும் சொத்து நற்கருணையாகும். நற்கருணை கத்தோலிக்க திருஅவையின் ஒட்டு மொத்த வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் ஆதாரமும் ஆதாயமுமாகும். இதுவே நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து திருஅவைக்கு விட்டுச் சென்ற உயரிய செல்வம். நற்கருணையில் இயேசுவின் பிரசன்னம் ஒரு அடையாளம் அல்ல மாறாக நற்கருணையில் இயேசு தன் உடலோடும், ஆன்மாவோடும், தெய்வீகத்தோடும் முழுமையாக பிரசன்னமாகியுள்ளார். "நானே வானிலிருந்து இறங்கி வந்த உயிருள்ள உணவு, என் தசையைத் தின்று இரத்தத்தைக் குடித்தால் ஒழிய நீங்கள் வாழ்வடைய மாட்டீர்கள்" என்று அதிகாரத்துடன் போதித்ததன் விளைவாக அவரது உடல் நமக்கு வாழ்வளிக்கும் உணவாகவும், இரத்தம் மீட்பளிக்கும் பானமாகவும் திகழ்கின்றது. அவரது உடலையும் இரத்தத்தையும் உட்கொள்ளும்போது இயேசுவையே நமக்குள் அனுமதிக்கின்றோம், அவரோடு இரண்டற கலக்கின்றோம்.

இந்நந்நாளில் இந்த நற்கருணையை எந்நிலையில் உட்கொள்கின்றோம் என சிந்திக்க அழைக்கப்படுகின்றோம்? விண்ணிலும் மண்ணிலும் அடங்காதவரை சிறிய மனிதர்களாகிய நாம் உண்ணும்பொழுது தயாரிப்பு அற்ற நிலையில் உண்டால் 1கொரி 11: 27-31ல் தூய பவுல் கூறுவதைப்போல் இயேசுவுக்கு எதிராக, நோயுற்று பாவத்திற்கு மரித்துப் போகிறோம். **சிந்திப்போம்:** கிறிஸ்துவை உட்கொண்டு, கிறிஸ்துவாக வாழ, நம்மையே உயிருள்ள அப்பமாக ஒப்புக்கொடுப்போம். இத்திருப்பலியில் இறையருள் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அபிஷேகத்தின் ஆண்டவரே, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் இறைமக்கள் அனைவரையும் ஆசீர்வதித்து, உம் திருவுடல் திருஇரத்தத்தின் சாட்சிகளாக அவர்கள் விளங்கிட அருள்வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
2. வழிநடத்தும் இறைவா, எம் நாட்டுத் தலைவர்கள் மக்களை ஒற்றுமையுடனும், சகோதர மனப்பான்மையுடனும் அமைதி வழியில் நடத்திச் செல்லத் தேவையான அருள்வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
3. மாற்றம் தரும் இறைவா, உம்திருவுடல் திரு இரத்தம் ஆகிய இவற்றின் மறைபொருளை வணங்கும் உம்திருமுன் நம்பிக்கையுடன் கூடி நிற்கும் நாங்கள் அனைவரும் உம் திருவுணவால் திடம்பெற்று, நம்பிக்கை

வாழ்வில் வேரூன்றி உம் மீட்பை பெற்றுக்கொள்ள தகுதியாக்கியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. துயர் துடைக்கும் இயேசுவே, ஏழ்மை, வறுமை, இயலாமை, முதுமை, தனிமை, சிறை வாசம் இவற்றில் உழலும் அனைவர் வாழ்விலும் வளமையும் மகிழ்ச்சியும் நிரம்பிட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 24.06.2019 புனித திருமுழுக்கு யோவான் பிறப்பு திருப்பலி

**முன்னுரை**

திரு. டே. ஆக்னல் ஜோஸ்

I. எசா 49: 1-6 II. தி.பணி 13: 22-26 லூக். 1: 57-66,80

இறை இயேசுவில் பிரியமானவர்களே, இன்று நாம் புனித திருமுழுக்கு யோவானின் பிறப்புப் பெருவிழாவைக் கொண்டாடுகிறோம். உலக மீட்பர் இயேசுவின் முன்னோடியாக இவ்வுலகில் தோன்றிய யோவான், தமது தாயின் வயிற்றில் இருந்தபோதே தூய ஆவியால் நிரப்பப்பட்டார். மரியன்னையின் உறவினரான எலிசபெத்தின் வயிற்றில் உருவான திருமுழுக்கு யோவான், ஆண்டவர் இயேசுவின் உறவுமுறை சகோதரராவார். இயேசு கிறிஸ்துவின் வருகையை உணர்ந்து தாயின் வயிற்றிலேயே அக்களிப்புடன் துள்ளிக் குதித்தவர் யோவான். எலிசபெத்தின் வயிற்றில் இருந்த வேளையில், அன்னை மரியா இவருக்குப் பணிவிடைச் செய்தார். எலியாவின் உளப்பாங்கையும் வல்லமையையும் உடையவராய் மீட்பர் இயேசுவுக்கு முன்செல்ல யோவான் தோன்றினார். நேர்மையாளர்களின் மனநிலையைக் கீழ்ப்படியாதவர்கள் பெறுமாறு மனமாற்றத்திற்கு அழைப்பு விடுக்க அவர் பிறந்தார். ஆண்டவருக்கு ஏற்புடைய ஒரு மக்களினத்தை தயார் செய்யுமாறு, திருமுழுக்கு வழங்குபவராக அவர் வாழ்ந்தார். மனிதராய் பிறந்தவர்களுள் பெரியவர் என்று ஆண்டவராலேயே புகழப்பட்ட திருமுழுக்கு யோவானைப் பின்பற்றி அநீதியை எதிர்க்கின்ற மனவுறுதி வேண்டி இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நீதியின் வேந்தரே இறைவா, எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும், அநீதிக்கு எதிராகக் குரல் கொடுப்பவர்களாகவும், உலகில் நீதியை நிலைநாட்ட உழைப்பவர்களாகவும் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. அமைதியின் பிறப்பிடமே இறைவா, உலகில் வாழ்கின்ற கிறிஸ்தவர்கள் அனைவரும், உண்மைக் கடவுளாகிய உமக்குத் துணிவுடன் சான்று பகரவும், மற்றவர்களை மனந்திருப்பவும் ஆற்றலை வழங்கி உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. நன்மைகளின் நாயகரே இறைவா, எங்கள் நாட்டையும் சமூகங்களையும் வழிநடத்தும் தலைவர்கள் அனைவரும், மக்களின் வாழ்வு செழிக்கத் தேவையான நன்மைகளைச் செய்யத் தூண்டுதல் அளித்து உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

4. மாட்சியின் மன்னரே இறைவா, சமூகத்தில் நிகழ்கின்ற தவறுகளைத் துணிவுடன் தட்டிக் கேட்கவும், இறையாட்சியை எங்கும் மலரச் செய்யவும் தேவையான மனவுறுதியை எங்களுக்குத் தந்து உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

## 27.06.2019 அலெக்சாந்திரியா நகர் புனித சிரில் திருப்பலி

**முன்னுரை**

திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

இன்று திரு அவையானது அலெக்சாந்திரியா நகர் புனித சிரில் திருவிழாவைக் கொண்டாடி மகிழ்கிறது. எகிப்து நாட்டில் அலெக்சாந்திரியா நகரில் 376ஆம் ஆண்டு பிறந்தவர் புனித சிரில். கி.பி. 412ல் இவர் அலெக்சாந்திரியா நகரில் ஆயரானார். "இயேசு படைக்கப்பட்ட பொருள் மட்டுமே மனித இயல்புடையவரே - அவரிடம் இறை இயல்பு என்பது இல்லை. மரியா இயேசுவின் தாய் மட்டுமே. இறைவனின் தாய் அல்ல" என்று நெஸ்தோரியுஸ் என்ற ஆயர் ஒரு தப்பறைக் கொள்கையைப் பரப்பினார். இந்த தப்பறையான போதனையைக் கண்டிக்க எபேசு நகரில் கி.பி. 431 ஜூன் 22ல் திருச்சங்கம் கூடி நெஸ்தோரியுசுக்குக் கடுமையான கண்டனம் தெரிவித்தது. இந்த சங்கத்தில் நம் புனிதர் கலந்துக்கொண்டு "மரியா இறைவனின் தாய்" என்று விவாதித்தார். திருஅவையும் "மரியா இறைவனின் தாய்" என்பதை தமது கோட்பாடாக வெளியிட்டது. கொதிப்படைந்த நெஸ்தோரியுசின் ஆதரவாளர்கள் சிரில்மீது குற்றம் சுமத்தி திரு அவையில் இருந்து வெளியேற்ற முடிவெடுத்தார்கள். பேரரசர் 2ம் தியோடோசியஸ் இருவரையும் கைது செய்தார். திருத்தந்தையின் பிரதிநிதி வந்து நடந்த உண்மைகளைக் கூறியதும் புனிதரை பேரரசர் விடுதலைச் செய்தார். கி.பி. 444 ஜூன் 27 அன்று நமது புனிதர் இறந்தார். திருத்தந்தை 13ம் சிங்கராயர் 1882ம் ஆண்டு இவரை மறைவல்லுநராக அறிவித்தார். இறைவனின் அன்னையிடம் இந்த திருப்பலி வழியாக திருஅவையையும் இந்த உலகத்தையும் காப்பாற்ற மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. ஆற்றல் நிறைந்த இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், பொதுநிலையினர் என அனைவரையும் ஆசீர்வதித்து, வாழ்வு தரும் வார்த்தையான உம்மோடு இணைந்திருக்கும் வரம் தரவேண்டுமென்றும், திருஅவைக்கு எதிரான தப்பறைக் கொள்கைகளை மிகுந்த ஆற்றலுடன் எதிர்த்து போராட வேண்டிய வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. அரவணைக்கும் இறைவா, எம் நாட்டுத் தலைவர்கள் எல்லா மக்களையும் எவ்வித வேற்றுமைகளையும் பார்க்காமல் அனைவரையும் அரவணைத்துச் செல்லக்கூடிய பண்பு நலன்களைப் பெற்றவர்களாகத் திகழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. வாழ்வின் வழிகாட்டியே இறைவா, எம் பங்கிலுள்ள இல்லங்களில் நல்லுறவு நீடிக்கவும், உறவுகளை வளர்ப்பதற்கான வழிமுறைகளை நாங்கள் தெரிந்துக்கொண்டு, பின்பற்றவும் எங்களை வழிநடத்தியருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 28.06.2019 திரு இருதயப் பெருவிழா திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

I. எசே 33: 11-16 II. உரோ 5: 5-11 லூக். 15: 3-7

இறை இயேசுவின் தூய நெஞ்ச அன்பில் பிரியமுள்ள சகோதர சகோதரிகளே, இன்று அனைத்துலக கத்தோலிக்க திருஅவை இயேசுவின் திருஇருதயத்தின் பெருவிழாவைக் கொண்டாட அழைக்கின்றது. இயேசுவின் திருஇதயம் ஆராதனைக்கும், வணக்கத்திற்கும், புகழ்ச்சிக்கும் உரிய ஒன்றாகும். கனிவும் இரக்கமும் கொண்ட இயேசுவின் இருதய அன்பிற்கு அளவேயில்லை. மூவொரு இறைவனின் கருணை இரக்கம் ஆகியவற்றின் சாயல் இது. இந்த பக்தியானது கி.பி.1050களில் புனித பிரான்சிஸ் தெ சேல்ஸ் மற்றும் புனித ஆசீர்வாதப்பர் சபையினரால் உலகெங்கும் பரப்பப்பட்டது. கி.பி. 1672ல் "விசிடேஷன்" சபைத் துறவி மார்கரேட் மேரி ஆலகாக்கு அவர்களுக்குப் பலமுறை இருதய ஆண்டவர் காட்சியளித்து மனுகுலத்தின்மீது தமக்குள்ள அன்பை உறுதிச்செய்தார். தம் இதயப் பக்தியைப் பரப்புவதற்குக் கருவியாய் அவரைத் தேர்ந்துக்கொண்டார். பாவப்பரிகாரத்தின் கடமையை மக்கள் உணர வேண்டுமென்று வலியுறுத்தினார்.

மேலும் மார்கரேட் மரிக்கு இந்த பக்தியைப் பரப்புவதில் ஏற்பட்ட ஐயங்கள், சிக்கல்களை நீக்கி வைக்கவும், இந்த பக்தி மற்ற எல்லா பக்தி முயற்சிகளிலும் தலைச் சிறந்தது என்பதைத் தெளிவுப்படுத்தவும் தூய கிளாட்லா கொலம்பியரை ஆன்ம குருவாகத் தெரிந்துக்கொள்ளவும் பணித்தார். திருத்தந்தையர்கள் 9ம் பத்திநாதர், 13ம் சிங்கராயர் 11ம் பத்திநாதர் ஆகியோர் இப்பக்தி முயற்சியை மிகவும் ஊக்குவித்தனர். கி.பி. 1856ல் திருத்தந்தை 9ம் பத்திநாதர் இப்பக்தியை கத்தோலிக்கக் குடும்பங்கள், குழுக்கள், துறவற சபையினர் அனைவரும் இயேசுவின் திரு இதயத்திற்குத் தங்களை அர்ப்பணிக்க அறிவுறுத்தினார். கி.பி. 1899ல் திருத்தந்தை 13ம் சிங்கராயர் இயேசுவின் திரு இதயத்திற்குப் பரிகாரம் செய்வதன் அவசியத்தைக் குறித்து எழுதிய திருமடலின் வழியாய் முதல் வெள்ளிக்கிழமைப் பக்தி பரவலாயிற்று.

இயேசுவின் திருஇருதய பக்தி இவ்வுலக வாழ்வில் ஆசீர்பொழியும் ஊற்றாகவும், அபரிமிதமான அருட்கொடைகளைக் கொடுக்கக் கூடியதாகவும், மறுமையில் நிலையான வாழ்விற்கு தொடக்கமாகவும் இருப்பதால், இவ்வுலக தீய நாட்டங்களை விலக்கி அன்பு, பரிவு, இரக்கம், தாழ்ச்சி, கீழ்ப்படிதல், மன்னிப்பு போன்ற பண்புகளைக் கொண்டு வாழ்வோம் எனும் உறுதியுடன் இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. தொடக்கமும் முடிவுமான எம் இறைவா, திருஅவையின் தலைவர் திருத்தந்தை பிரான்சிஸ், கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், இறைப்பணியாளர்கள் அனைவரும் இயேசுவின் திரு இருதய இரக்கத்தின் பண்புகளால் இறைமக்களை வழிநடத்தி வாழ்வளிக்க வேண்டிய அருளைத் தந்தருள தூய நெஞ்சம் கொண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.
2. வானக மருத்துவரே இறைவா, தீராத நோயினாலும், ஆறாத மனப்புண்களாலும் அவதியுறும் அனைவரும் உம் திரு இருதயத்தின் இரக்கப் பெருக்க அன்பின் வல்லமையினால் குணம் பெற வேண்டுமென்று தூய நெஞ்சம் கொண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.
3. ஆறுதலின் ஊற்றே இறைவா, இன்றைய உலகம் வன்முறை எனும் கொடிய ஆயுதத்தால் சிக்கி சீரழிந்து உயிர்ப்பலிக்குட்படுத்தப்பட்டு அழிவின் விளிம்புக்கு செல்கிறது. உறவுகளை இழந்தவருக்கு ஆறுதலும், உம்மிடம் வந்த ஆன்மாக்களுக்கு நிலையான பேரின்ப வாழ்வும் தரவேண்டுமென்று தூய நெஞ்சம் கொண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.
4. நீதியின் பாதையில் வழிநடத்தும் இறைவா, மக்களை நல்வழியில் வழிநடத்தவும், சிறந்த திட்டங்களினால் கல்வி, வேலை வாய்ப்பு அளிக்கவும், மக்களின் நலனே தம் வாழ்வென வாழவும் நல்மனம் கொண்ட நல்ல மனிதர்களை ஆட்சியாளர்களாக அளிக்க வேண்டுமென்று தூய நெஞ்சம் கொண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

## இயேசுவின் திருஇருதயத்திற்கு குடும்பங்களை அர்ப்பணிக்கும் செபம்

இயேசுவின் திருஇருதயமே எங்கள் குடும்பங்களை உமக்கு அர்ப்பணிக்கின்றோம். நன்றி கூறுகின்றோம். எங்களை ஆசீர்வதியும். எப்பொழுதும் இறைப்பிரசன்னத்தை உணர்ந்து வாழ வரம் தாரும். பலவீனர்களுக்கு பலத்தையும் செல்வம் உடையவர்கள் பிறருக்கு உதவி செய்யும் நல்ல மனத்தையும் தந்தருளும். விதவைகளுக்கும், அநாதைகளுக்கும் நாங்கள் உதவியாய் இருக்கச் செய்தருளும். சிறையில், தனிமையில், நோயில், துன்பத்தில் இருக்கின்றவர்களை ஆசீர்வதியும். உலகிலுள்ள ஒவ்வொரு குழந்தைகளுக்கும் விசுவாசத்தையும், தெய்வ பயத்தையும், நல்ல ஒழுக்கத்தையும், பணிவையும், அறிவையும், தந்தருளும். மரண தருவாயில் இருக்கின்றவர்களை நாள்தோறும் சந்தித்தருளும். ஆன்மாக்களை விண்ணகத்தில் சேர்த்தருளும். எங்கள் அனைவருக்கும் அடைக்கலமாகவும், தஞ்சமாகவும் சாகும் தருவாயில் உதவியாகவும் இருந்தருளும். ஆமென்.

## 29.06.2019 புனிதர்கள் பேதுரு, பவுல் திருத்தூதர் பெருவிழா திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிசம்பந்தன்

I. திப 12: 1-11 II. 2திமொ 4: 6-8,17-18 மத் 15 16: 13-19

இறைஇயேசுவில் இனிய சமூகமே, இன்றைய நாளில் திருஅவையின் இரு தூண்களான புனிதர்கள் பேதுரு, பவுல் ஆகியோரின் பெருவிழாவைச் சிறப்பிக்க அழைக்கிறது. மீன்பிடித்துக் கொண்டிருந்த புனித பேதுருவை இயேசு அழைத்து, இனி மனிதர்களைப் பிடிப்பவனாயிரு என்று கூறி தன் சீடராக்கினார். அதன்பின் இயேசுவே மெசியா என்பதை கண்டுணர்ந்து "நீரே மெசியா" என்று உறுதிச் செய்தவர். இயேசு பிடிப்பட்டபோது மும்முறை மறுதலித்தார் என்றாலும் தூய ஆவியாரின் துணைகொண்டு திருஅவையை அவரிடமே ஒப்படைத்தார் இயேசு. கிறிஸ்தவர்களை வதைத்த சவுலாக இருந்து, பின் இயேசுவின் அழைப்பினால் தமஸ்கு நகரில் பவுலாக அழைக்கப்பட்டவர். இருவருமே திருஅவையின் இரண்டு தூண்களாகக் கருதப்பட்டவர்கள். புனித பேதுரு திருஅவையின் தலைமை ஏற்று வழிநடத்தும் பணியிலும், புனித பவுல் திருஅவையின் நற்செய்திப் பணியை ஏற்று பாலஸ்தீன் பகுதிக்கு வெளியிலும் சுற்றுப் பயணங்கள் மேற்கொண்டு, பிறஇனத்தாருக்கும் நற்செய்தியை போதித்தவர். அதனாலேயே பவுல் 13ம் தூதர் எனவும் பிற இனத்தாரின் திருத்தூதர் என்றும் அழைக்கப்படுகிறார்.

இருவருமே மறைச்சாட்சிகளாக உயிர்துறந்தவர்கள் இருவரும் ஒன்றாக பாழடைந்த சிறையில் அடைக்கப்பட்டவர்கள். புனித பவுல் "சால்வியன்" என்னும் இடத்தில் தலைவெட்டுண்டு இறந்தார். அவ்விடத்தில் பவுல் பேராலயமும், அதில் அவர் கல்லறையும் உள்ளன. புனித பேதுரு கி.பி.64ல் நீரோ மன்னன் காலத்தில் சிலுவையில் தலைகீழாக அறையுண்டு இறந்தார். இவ்விரு புனிதர்களுமே இயேசுவிற்காக, அவரது நற்செய்தியின் பொருட்டு தங்கள் உடல், பொருள், ஆவியைக் கையளித்தவர்கள். திருஅவையின் நிர்வாகப்பணியும், நற்செய்தியின் வளர்ச்சிப் பணியும் சேர்ந்து கிறிஸ்தவ வாழ்வு தழைக்கவும், இயேசுவின் இறையாட்சி அமைதியுடன் செயல்படவும் வேண்டி அதற்காக உழைத்த இத்திருத் தூதர்களை நினைவில் கொண்டு இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. திருஅவையின் நாயகனே இறைவா, புனித பேதுருவின் வழித்தோன்றலான திருத்தந்தை, ஆயர்கள், கர்தினால்கள், குருக்கள், இருபால் துறவியர், திருநிலையினர் அனைவரும் தங்கள் முன்னோடிகளின் எடுத்துக்காட்டை பின்பற்றி கிறிஸ்தவம் தழைத்தோங்க அயராது உழைக்கவும், உறுதியுடன் வாழவும் உம்மை மன்றாடுகிறோம்.
2. திருஅவையின் தூணான இறைவா, ஏதும் அறியா பாமரனாகிய புனித பேதுருவையும் எல்லாம் கற்றுத்தேர்ந்த வித்தகனான புனித பவுலையும்

ஒன்றிணைத்து திருஅவையின் தூண்களாக நிறுத்தி நற்செய்தியை உரக்கச் சொல்ல அருள் தர வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. திருஅவையின் இறைவா, நாட்டு மக்களின் நலன் கருதி நல்ல பல தலைவர்கள் தோன்றவும், நல்ல மழையைக் கொடுத்து, விவசாயம் பெருகவும், விவசாயிகள் வாழ்வில் உயரவும், விலைவாசிகள் குறைந்து ஏழை எளிய மக்களின் தேவைகள் நிறைவேறவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## பள்ளி ஆண்டின் தொடக்க நாள் - செபவழிபாடு

**முன்னுரை** திரு. சாண்டோ

**வழிநடத்துபவர்:** அன்பார்ந்த ஆசிரிய பெருமக்களே, மாணவச் செல்வங்களே, இன்று நாம் நமது கல்வியாண்டினை தொடங்குகின்றோம். இன்றைய முதல் நாளில் நமக்கிருக்கும் மகிழ்ச்சியும், உற்சாகமும் இந்த ஆண்டு முழுவதும் நீடிக்க இறைவனை வேண்டுவோம். வாழ்க்கை என்பது பலவிதமான போராட்டங்கள் நிறைந்தது அந்த போராட்டங்களை சந்தித்து வெற்றிக் கொள்ளும்பொழுதுதான் நமது வாழ்வில் முன்னேற்றம் பிறக்கிறது. எனவே இந்தாண்டு முழுவதும் இறைவனின் துணையை நாடி இப்பாடலுக்குச் செவிமடுப்போம்.

**பாடல்:** ஒவ்வொரு பூக்களுமே...

**வழிநடத்துபவர்:** நம் வாழ்க்கையில் நாம் சேர்த்து வைக்கும் எதுவுமே நிலையாக இருக்காது. ஆனால் கல்விமட்டுமே நிலையானது நம்மோடு கடைசிவரை வருகின்றது. நமக்கு உயர்வையும் தருகின்றது. இப்பொழுது ஒரு திருக்குறளுக்கு செவிமடுப்போம்.

**திருக்குறள்**

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையார் கல்லா தவர்

(கல்வியின் சிறப்பைப் பற்றி ஒரு சிறிய உரை: தலைமை ஆசிரியர்)

**வழிநடத்துபவர்:** மாணவச் செல்வங்களே, இறைவன் ஒளியாக இருக்கின்றார். ஒளி என்றால், அறிவு ஒளி, ஞான ஒளி, கேள்வி ஒளி, பார்வை ஒளி, புரிந்துக்கொள்ளும் ஒளி என்று பலவிதங்களில் ஒளியாக இருக்கின்றார் இறைவன். இதை வெளிப்படுத்தும் அடையாளமாக இங்கே இந்த குத்துவிளக்கை ஏற்ற நமது தலைமை அசிரியரை அன்புடன் அழைக்கின்றோம். எரிந்துக்கொண்டு இருக்கும் விளக்கு நமக்கு இறைவனை குறித்துக் காட்டுகின்றது. நாம் இறைவனிடம் ஒளியைப் பெற்றுக் கொள்வதற்கு அடையாளமாகவும், நான் ஒரு சிறந்த மாணவன் மாணவியாக தகிழ்வேன் என்று உறுதி அளிப்பதன் அடையாளமாகவும் வரிசையாக வந்து இந்த ஒளியை நம் நெற்றியில் ஒற்றிக்கொண்டு வகுப்புகளுக்குச் செல்வோம்.

# பகுதி - 2: விசுவாசத்தில் வளர...

## திருஇருதயம் தரும் பாதுகாப்பு

திரு. புல்லோன் ஜோ லூயிஸ்

விண்முதல் மண்வரை நமது பாதுகாப்புக்குத்தான் உள்ளன. உயிருக்கு உடல் எவ்வாறு முக்கியமோ, உடல் உயிருக்கு பாதுகாப்பாகும் அதுபோன்றே இயற்கையும் நமக்கு பாதுகாப்பு. இயற்கையை நாம் பாதுகாக்காதபோது, இயற்கை நம்மைப் பாதுகாக்க மறுத்து விடுகிறது. மறந்து விடுகிறது. விலங்குகள், பறவைகள், இயற்கை வளங்கள் என அனைத்திற்கும் இன்றியமையாத ஒன்று பாதுகாப்பு, சுற்றுச்சூழலைப் பாதுகாக்காமல் மாசுக்கள் பெருகிடச் செய்யும்போது ஓசோன் படலத்துக்குப் பாதுகாப்பு இல்லை. ஆலைகளின் கழிவுகளை நிலத்தடி நீரிலும், விவசாய நிலங்களிலும், ஏரி குளங்களிலும் கலந்திடச் செய்யும்போது குடிநீருக்கும், விவசாயத்திற்கும் பாதுகாப்பு இல்லை. ஆற்று மணலை அள்ளி எடுத்து நிலத்தடி நீருக்குப் பாதுகாப்பைத் தவிர்க்கிறோம். மரங்களை அழிக்கும்போது மழைதரும் சூழலுக்குப் பாதுகாப்பு இல்லை. பயணங்களின்போது பாதுகாப்புத் தேவை. பணியிடங்களில், தொழிற்சாலைகளில், விளையாடும் போது என எப்போதும் பாதுகாப்பு அவசியம். ஏன் உண்ணும் உணவிலும், உண்ணும்போதும்கூட பாதுகாப்பு அவசியம்.

குடும்பங்களை எடுத்துக்கொள்வோம், பிள்ளைகளுக்குப் பெற்றோர் பாதுகாப்பு, மனைவிக்கு கணவன் பாதுகாப்பு, பெண்களுக்கு கற்பு பாதுகாப்பு. இப்படி பாதுகாப்பின் அவசியத்தை நீண்டப் பட்டியல் போடலாம். பாதுகாப்பில்லையேல் வாழ்வில்லை. மனிதர்களாகிய நாம் வளமாக, நலமாக, சத்தான உணவுண்டு நோய்நொடியில்லாமல் பாதுகாப்பாக, ஆரோக்கியமாக, ஆண்டாண்டு காலம் வாழ விரும்புகிறோம். நமக்கு வாழ்வளித்த இறைவனும், நாம் வாழவேண்டும் என்றே விரும்புகிறார். அதனால்தான் தன் பாதுகாப்பில் இருந்த ஆதிபெற்றோர் தம் பாவத்தால் வாழ்விழந்தார்கள். ஆதாம் எங்கே? என்று... அவர்களைத் தேடி அலைந்தார்.

காலங்கள் கடந்த பின்னும் மனிதன் திருந்தியதாகத் தெரியவில்லை. அவர்கள் செய்யும் தீமைகள் பெருகுவதைக் கண்ட ஆண்டவர், மண்ணுலகில் மனிதனை உருவாக்கியதற்காக மனம் வருந்தினார், அவர்களை அழிக்க நினைத்தார். ஆனால் நோவாவிற்கு ஆண்டவர் அருள்பார்வைக் கிடைத்தது. நோவாவையும், அவர் குடும்பத்தாரையும், எல்லா உயிரினங்களையும் பாதுகாத்தார். சோதோம் கொமோராவின் அழிவின்போது, லோத்துவையும், அவர்தம் புதல்வியரையும் பாதுகாத்தார். யாக்கோபின் மக்கள் தங்கள் சகோதரன் யோசேப்பை வஞ்சித்து அடிமையாய் மிதியான் நாட்டு வணிகரிடம் விற்றுவிட்டனர். ஆண்டவரோ அடிமையான யோசேப்பை எகிப்தின் ஆளுநராக்கி பாதுகாத்தார்.

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரயேலரை, செங்கடலை இரண்டாகப்பிரித்து கட்டாந்தரையாக்கி, பகலில் மேகத் தூணிலும், இரவில் நெருப்புத் தூணிலும் இருந்து பார்வோன் படைகளிடமிருந்து காப்பாற்றி செங்கடலை கடக்கச் செய்தார். இப்படி மீட்கப்பட்ட அவர்கள், தேனும் பாலும் பொழியும் கானான் தேசத்திற்குச் சென்றபோது வழியில் மடிந்துவிடக்கூடாது, வாழ்விழந்துவிடக்கூடாது என்று உண்ண மன்னாவும், பருக நீரும் பொழிந்து பாதுகாத்தார். இவ்விதமாய் இறைவன் தம்மை நம்பியவரை விசுவசித்தவரைப்பாதுகாத்தார், காப்பாற்றினார். இயேசு மட்டும் என்ன? தந்தையைப்போலவே இயேசுவும் இரக்கமுள்ளவராயிருந்ததால் தான் கானாவூர் திருமணம் பந்தியில் இரசம் தீர்ந்துவிட்ட நிலையில், தாய் மரியாள் இயேசுவுக்கு அதை உணர்த்தியபோது "என் நேரம் இன்னும் வரவில்லை" என்று கூறி, சூழ்நிலையை உணர்ந்தவராய் தண்ணீரை இரசமாக்கி, பரிமாரச் சொன்னார். அது பருகுவதற்காக மாற்றப்பட்ட இரசமல்ல, மணமக்கள், மணவீட்டார் மானத்தை, வாழ்வை பாதுகாக்க செய்யப்பட்ட புதுமை, ஆம் இயேசுவின் இதயம் இளகிய இதயம், பரிவுமிக்க இதயம்.

இயேசு பாலைநிலத்தில் தனிமையாக ஓர் இடத்திற்குச் செல்லும்போது, மக்கள் திரள் அங்கேயும் வந்துவிட்டது (மத் 14: 13-21). இயேசு அவர்கள்மீது பரிவு கொண்டார். இவர்களிடம் எதுவும் இல்லை. இவர்களைப் பட்டினியாய் அனுப்பிடவும் விரும்பவில்லை. அனுப்பினால் வழியில் தளர்ச்சியடைந்து விடலாம். அங்கிருந்த ஐந்து அப்பங்களையும், இரண்டு மீன் துண்டுகளையும் அவர்களுக்கு பகிர்ந்தளிக்கின்றார். அவர்களின் தளர்ச்சியைப் போக்கிப் பாதுகாக்கிறார். ஆம் இல்லாதவர், ஒதுக்கப்பட்டோர், பாவிகள்மீது இயேசுவின் இதயத்தில் தனிப்பட்ட கரிசனை. இயேசுவின் இதயம் இத்துயர்கண்டு துடிக்கின்றது. உலகின் கடைகோடியில் யார் நோயுற்றாலும், மடிந்தாலும், பட்டினியால் வாடினாலும் இயேசுவின் இதயம் வேதனை அடைகிறது. எனவே "பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்போரே என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் (மத் 11:28), என்றவராய் நம் ஒவ்வொருவரின் சுமைகளின் வேதனையைக் குறைத்து நம்மைப் பாதுகாக்கிறார்.

திபா. 121: 7-8 ஆண்டவர் நம்மைப் பாதுகாக்கின்றார் என்பதைத் தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறது. ஆண்டவர் உம்மை எல்லாத் தீமைகளிலிருந்தும் காப்பார், அவர் உம் உயிரைக் காத்திடுவார், நீர் போகும்போதும் உள்ளே வரும்போதும் இப்போதும் எப்போதும் ஆண்டவர் உம்மைக் காத்திடுவார். இயேசுவின் அன்பு இதயம் அன்றுபோல் இன்றும், படைப்பின் ஒவ்வொருவரையும் பாதுகாத்து மீட்பளிக்கின்றது. ஒவ்வொன்றையும் பாதுகாக்கின்றது. அவரின் இதயம் உறவுகளின் சங்கமம், கருணையின் வற்றாத நதி. இந்த இதயத்தின் இயக்கம் அன்பு செய்யவும், அன்பினைப் பெறவுமே துடிக்கிறது. இத்திரு இருதயம்

வணக்கத்திற்குரியது, ஆராதனைக்குரியது, இயேசுவின் இத்திரு இருதய பக்தி நம்மை இறையன்பில் உறவில் பற்று கொள்ளவும், பாதுகாப்புப் பெறவும் உதவுகிறது.

அன்று நோவா தன்னைப் பாதுகாத்த இறைவனுக்கு எப்படி எரிபலி செலுத்தினாரோ அதுபோன்றே நாமும் இத்திரு இருதய பக்தியை நிறைவாக உணர்ந்து, நம் இல்லங்களில் திரு இருதய அரசாட்சியை நிறுவச் செய்து, அவரின் பாதுகாப்பை உணர்ந்து நம் குடும்பங்களில் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் பாதுகாப்போம். கணவன் மனைவி உறவு, பிள்ளைகள் பெற்றோர்கள் உறவு சிறக்கவும், பாதிக்கப்படாமல் இருக்கவும் பாதுகாக்கிறது. குடும்பத்தின் சமாதானத்தைச் சீர்குலைக்கும் எந்த தீய சக்தியும் அணுகாமல் பாதுகாக்கிறது. ஒருவர் ஒருவரை மன்னித்து, உறவுகள் மேம்படும் விதமாய் பாதுகாக்கிறது. இயேசுவின் இதயம் பொறாமை, பேராசை, பொருளாசை, காமம் போன்ற சூறாவளி பேய்காற்றால் அன்பு தீபம் அணையாமல் காக்கிறது. அன்புக்கு எதிரான பகைமை, கோபம், வஞ்சம், பழிக்குப்பழி போன்ற தீமைகளிலிருந்து பாதுகாத்து திரு இருதய அன்பிற்கு சொந்தக்காரர்களாய் இருக்கச் செய்கிறது, மனித நேயமற்ற, மனிதாபிமானமற்ற வன்ம செயல்களிலிருந்து பாதுகாக்கிறது, அகில உலக இருளை ஓட்டி, அகிலத்தை ஒளிர்வித்து பாதுகாக்கிறது.

## இன்று தூய ஆவியாரும் நானும்

திரு. பி. விக்டர்

**யார் இந்த தூய ஆவியார்?**

தந்தையாம் கடவுளின் விருப்பத்தை வெளிப்படுத்திய அவரது மகனாகிய இயேசுவின் வார்த்தைகளைச் செயல்படுத்தி நாம் வாழும் விதத்தில், நமக்காக இவ்வுலகை உண்டாக்கியவர்தான் தூய ஆவியார். இதைத்தான் இவ்வுலக படைப்பின் நிகழ்வில் நாம் காணுகின்றோம். சுருக்கமாகச் சொல்வதென்றால், தந்தையாம் இறைவனின் விருப்பத்தை இயேசுவின் வார்த்தை வழியாகச் செயல்படுத்துகிறவரே இந்தத் தூ ய ஆவியார். இந்த உலகமானது படைக்கப்பட்டது முதல் மீட்பராம் இயேசுவின் வருகை வரையில் தந்தையாம் கடவுளின் ஆளுகைக்குள் இருந்தது. இயேசுவின் வருகை முதல் விண்ணேற்பு வரையில் இயேசுவின் ஆளுகைக்குள் இருக்கும். இயேசு விண்ணேற்பு அடைந்தது முதல் உலகின் இறுதிவரையிலும் தூய ஆவியாரின் ஆளுகைக்குள் இருந்தது. ஏனென்றால் உலகின் இறுதிவரையிலும் என்றென்றும் நம்மோடு இருக்கும்படியாகத்தான் தூய ஆவியார் நம்முள் பொழியப்பட்டுள்ளார் (யோவா 14:16). தந்தையாம் கடவுளோடு இருந்த இந்தத் தூய ஆவியாரை இயேசு விண்ணேற்படைந்து நமக்காக அனுப்பி வைத்துள்ளார் (யோவா 16: 17). இதுதான் தூய ஆவியாரின் பொதுவான அறிமுகம்.

**தூய ஆவியாரின் பணியென்ன?**

தூய ஆவியானவர் பொழியப்பட்டு இவ்வுலகில் அவர் இயங்கிய, இயக்குகிற செயல்களைக் கொண்டு அவரது பணிகளை மூன்று விதமாகப் பிரிக்கலாம். புனிதப்படுத்தும் பணி, போதிக்கும் பணி, மற்றும் திடப்படுத்தி வழிநடத்தும் பணி என இம்மூன்று பணிகளை அவர் முழுமையாகச் செய்து வருகின்றார்.

**புனிதப்படுத்தும் பணி:** தூய ஆவியார் அவர் குடியிருக்கும் ஆலயமாக நம்மைத் தெரிந்துக்கொண்டு நமக்குள் குடியிருக்கிறார் (1கொரி 3:17). அவர் வெறுமனே நமக்குள் குடியிருப்பதில்லை. மாறாக, பாவம், நீதி, நியாயத்தீர்ப்பு குறித்து நம்மைக் கண்டித்து உணர்த்துகிறார் (யோவா 16: 8). அதோடு அவர் நிற்பதில்லை, நாம் நமது வாழ்க்கைச் சூழல்களால் செபம் செய்யத் தடுமாறுகிற வேளைகளில் நம்மை செபிக்க வைக்கிறவராக, நமக்காகப் பரிந்துப்பேசி செபிக்கிறவராக நமக்குள் செயல்படுகிறார். இவ்வாறு நமது வாழ்வைத் தூய்மைப்படுத்தி தந்தையாம் இறைவனுக்கு ஏற்புடைய மக்களாக வாழ நம்மை மாற்றுகிறார்.

**போதிக்கும் பணி:** திருவிவிலியத்தை நமக்கு எழுதிக் கொடுத்தவர் தூய ஆவியார். அவரது ஏவுதலாலேயே மனிதர்கள் திருவிவிலியத்தை எழுதினார்கள் (2உரோ 1:21). இவர் திருவிவிலியத்தின் ஆசிரியராக இருப்பதால் இயேசுவின் எல்லா போதனைகளையும் நமக்குக் கற்றுத்தருகிறார். இயேசு கூறிச்சென்ற அனைத்தையும் நமக்கு நினைவுப்படுத்துகிறார் (யோவா 14:26). வேறு எவரும் நமக்குக் கற்பிக்கத் தேவையில்லாத அளவுக்கு தூய ஆவியாரின் அருட்பொழி நமக்கு எல்லாவற்றையும் கற்றுத்தருகிறது. நாம் எந்தளவுக்கு அவரோடு இணைந்து வாழ்கின்றோமோ அந்தளவுக்கு நாம் அவரிடமிருந்து கற்றுக்கொள்கிறோம் (1யோவா 2:27). இவ்வாறாக அவர் நமக்குப் போதித்து கற்றுத்தருகிறார்.

**திடப்படுத்தி வழிநடத்தும் பணி:** தூய ஆவியாரால் யாரெல்லாம் வழிநடத்தப்படுகிறார்களோ அவர்கள்தான் கடவுளின் மக்கள் என்று அழைக்கப்படுவர் (உரோ 8:14). தான் வழிநடத்துகிற மக்களை அவர் திடப்படுத்துகிறார். இவ்வுலகில் நாம் இயேசுவின் சாட்சிகளாய் வாழ்வதற்கு உதவி செய்கிறார் (இணை 1:8). அதுமட்டுமன்று, அவரது கனிவான அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் ஆகியவற்றை நமக்கு வழங்கி இயேசுவுக்கு உரியவர்களாக நம்மை வழிநடத்துகிறார் (கலா 5:22). இத்துடன் அவரது வழிநடத்துதல் நின்றுவிடுவதில்லை. அவர் தமது வரங்களைப் பொழிந்து வளமான வாழ்வுக்கு நம்மை வழிநடத்துகிறார்.

**ஆவியாரின் வரங்கள்:** அவரவர் தகுதிக்கேற்ப ஒவ்வொருவருக்கும் தமது வரங்களைப் பொழிந்து நம்மை வழிநடத்துகிறார். ஒருவருக்கு ஞானத்தை போதிக்கும் வரத்தை வழங்குகிறார், வேறு ஒருவருக்கு

அறிவுச்செறிந்த சொல்வளத்தை அதே ஆவியார் வழங்குகிறார். இன்னொருவருக்கு நம்பிக்கை அருளுகிறார். மற்றொருவருக்குப் பிணி தீர்க்கும் அருள் கொடையை அளிக்கின்றார். ஒருவருக்கு வல்ல செயல்கள் செய்யும் ஆற்றலையும் இன்னொருவருக்கு இறைவாக்குரைக்கும் ஆற்றலையும் மற்றொருவருக்கு ஆவிக்குரியவற்றைப் பகுத்து அறியும் ஆற்றலையும், இன்னும் சிலருக்கு பல்வகை பரவசப்பேச்சுப் பேசும் ஆற்றலையும், சிலருக்கு அதை விளக்கும் வல்லமையையும் வழங்குகின்றார். ஆவியார் தமது விருப்பம்போல் ஒவ்வொருவருக்கும் இவற்றைப் பகிர்ந்தளித்து நம்மை வழிநடத்துகிறார் (1கொரி 12:7-10). உண்மைக்காகத் துன்புறும் நேரங்களில் நம்மோடு இருந்து என்ன பேசுவது என்று அவரே பேசி நம்மை வழிநடத்துகிறார் (மத் 10:20). இவ்வாறாக ஆவியார் தனது பணிகளை நம்மோடிருந்து நமக்குள் இருந்து செய்து முடிக்கிறார்.

**தூய ஆவியாரை எப்படி பெற்றுக்கொள்வது?**

திருவிவிலியத்தில் பல்வேறு சூழல்களில் தூய ஆவியானவர் பொழியப்படுவதைப் பார்க்கின்றோம். ஒருவர் மனம் மாறி திருமுழுக்குப் பெறும்பொழுது தூய ஆவியார் பொழியப்படுகிறார். (இணை 2:38). இறைவனின் உண்மைப் பணியாளர்கள் தங்கள் கைகளை ஒருவர்மேல் ஒருவர் வைத்து மன்றாடும் வேளைகளில் தூய ஆவியார் பொழியப்பட்டுள்ளார் (இணை 8:17). இறைவார்த்தைகளை கவனமாய் கேட்கும்பொழுதும் தூய ஆவியார் பொழியப்பட்டள்ளார் (இணை 10:48). மேற்கூறியவை யாவும் திருவிவிலியத்தில் தூய ஆவியானவர் பொழியப்பட்ட விதங்கள்.

**நமது வாழ்வில் இந்தத் தூய ஆவியானவர் எவ்வாறு செயல்படுகிறார்?**

தந்தையாம் கடவுளுடன் நாம் எத்தகைய உறவுடன் வாழ்கின்றோம்? என்பதைப்பொறுத்துத்தான் தூய ஆவியாரின் செயல்பாடும் இருக்கும். எனது வாழ்வில் அனுதினமும் அதிகாலையில் 4.30 மணிமுதல் 6.30மணிவரை ஆண்டவரோடு இருப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்நேரங்களில் தூ ய ஆவியார் என்னுடைய இறைப்பணிக்குத் தேவையான யாவற்றையும் சொல்லித்தந்து என்னை வழிநடத்துகிறார். நான் சுமாராகத்தான் பாடுவேன், இசையின் நுணுக்கங்கள் எதுவும் தெரியாது, ஆனால் தூய ஆவியாரின் தூண்டுதலாலேயே அநேக பாடல்களை அதுவும் குழந்தைகளுக்கான திருவிவிலியப் பாடல்களை எழுத முடிந்தது. இறைவாக்குப் பணியாளராகப் பணி செய்யம் வாய்ப்பு வழங்கப்பட்டது. பெரிதாக இறையியல் படிப்பு எதையும் படிக்காத நிலையிலும், இறைமக்களோடு ஆண்டவரின் வார்த்தைகளை வல்லமையுடன் எடுத்துரைக்க தூய ஆவியார் துணை செய்கிறார். எனது காலை தியான நேரத்திலேயே நற்செய்தி கூட்டங்களில் பேசவேண்டிய தலைப்பையும் அதற்கான விளக்கங்களையும் தூய

ஆவியார் தந்துவிடுகின்றார். அதுமட்டுமன்று, அவ்விளக்கங்களோடு சொல்லவேண்டிய எடுத்துக்காட்டுகளையும் வழங்கிவிடுகிறார். இதோடு அவரது பணி முடிவதில்லை. நான் நற்செய்தி கூட்டங்களுக்குச் செல்கையில் என்னோடு உடனிருந்து சிறப்பான விதத்தில் மக்களுடைய மனதில் திருவிவிலிய விளக்கங்கள் பதிகிற விதத்தில் என்னைப் பேச வைக்கிறார். உண்மையை யாருக்கும் பயப்படாமல் தைரியமாகப் பேசவைக்கின்றார். இதை என்னுடைய ஒவ்வொரு பணியிலும் நான் உணர்கின்றேன்.

வாழ்க்கையின் எல்லாச் சூழல்களிலும் தெளிவான முடிவெடுக்க உதவி செய்கின்றார். அதேபோன்று மோசமான சூழலில் உணர்ச்சி வசப்படாமலும் கோபப்படாமலும் நிதானத்துடன் இருக்க உதவி செய்கின்றார். நம்பிக்கை இழக்கத்தக்க சூழலிலும் நம்பிக்கை இழக்காதபடி அவரது உடனிருப்பு என்னைப் பாதுகாக்கிறது.வெற்றியைக்கண்டு மகிழ்ந்தாலும் அதனால் பெருமை கொள்ளாதபடி என்னைப் பாதுகாக்கிறார். அதேபோன்று தோல்வி ஏற்பட்டாலும் துவண்டுவிழாதபடி என்னைத் தேற்றி உதவிகள் செய்து உயர்த்துகிறார். தூய ஆவியார் என்னுடன் இணைந்திருப்பதால் இறைப்பணியை இன்முகத்துடன் செய்ய முடிகிறது. குடும்பத்தையும் குழப்பமில்லாமல் நடத்திச்செல்ல முடிகிறது. உள்ளத்திலே வாசம் செய்யும், உன்னதத்தின் ஆவியே, உமக்கென்றும் ஸ்தோத்திரமே, கலங்கினாலும், திகைத்திட்டாலும் கவலையினால் தடுமாறினாலும் காப்பாற்றி நடத்துகிறீர். கனித்தந்திட்ட காலமெல்லாம் பணிசெய்திட வரங்களைத் தருகின்றீர், வல்லமைகள் தருகின்றீர், ஆவியே, தூய ஆவியாரே ஆட்கொள்ளும் எங்களையே ஆமென்.

## புனித ஜோசப் கஃபாசோ வாழ்வு - நமக்கு தரும் பாடம்

திரு. ஜான் சுரேஷ்

**சமூக சீர்த்திருத்தத்தில் ஒப்பற்றவர்:** தொன் போஸ்கோவின் இளமைப் பருவம் முதல் அவருடைய வாழ்வில் பெரும் மாற்றத்தை உருவாக்கிய மறைமாவட்டக் குருக்களில் முதன்மையானவர் புனித ஜோசப் கஃபாசோ அடிகளார். இவர் 19ம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் இத்தாலியின் தூரின் நகரில் சமூக சீர்த்திருத்தம் செய்தவர்களில் சிறப்பான ஒருவராக இன்றும் போற்றப்படுகின்றார். இவர் சாதாரண விவசாயக் குடும்பத்தில் 1811ல் பிறந்தவர். சிறுவயது முதலே பல ஒறுத்தல் முயற்சிகளை மேற்கொண்டு, பல்வேறு உதவிகளை செய்தார். தினமும் திருப்பலிக்குச் சென்று சனிக்கிழமைகளில் அன்னை மரியாவுக்கு நோன்பிருந்து திருச்செபமாலை ஒப்புக்கொடுப்பார்.

**மறைப்பணியின் துவக்கம்:** இளம் வயதிலேயே ஆன்மீக சிந்தனைகளில் சிறந்து விளங்கிய புனித ஜோசப் கஃபாசோ, ஏழை எளிய சிறுவர்களை ஒன்றுகூட்டி அவர்களுக்கு மறைக்கல்வி கற்றுக் கொடுப்பதை வழக்கமாக்கிக் கொண்டார். இதனால் மக்களால் "சிறிய புனிதர்" என்று அன்பாக அழைக்கப்பட்டார்.

**துறவற வாழ்வில் கால்பதித்தல்:** புனித ஜோசப் கஃபாசோ தன் அன்றாட வாழ்வில் அவருக்கு ஏற்பட்ட ஒரு மகத்தான ஈர்ப்பே - இந்த தேவ அழைத்தல். அதனால் குருமடத்தில் சேர்ந்து மெய்யியல், இறையியல் பயின்றார். கடின உழைப்பும், அறிவுத் திறனும் கொண்ட கஃபாசோ 1833ல் தமது 22ம் வயதில் குருவாக அருட்பொழிவு பெற்றார். அதனைத் தொடர்ந்து குருமட ஆசிரியராகவும், அதிபராகவும் பணியாற்றி வந்தார்.

**எளியோரில் அகமகிழ்ந்தார்:** புனித ஜோசப் கஃபாசோ, ஏழை எளியோரின் வாழ்வில் அக்கறைக் கொண்டவர், தனக்கென இருந்த அனைத்தையும் ஏழைகளுக்குக் கொடுத்தார். உண்ண உணவில்லாமல் பட்டினிக் கிடக்கும் அளவிற்கு, தம்மிடம் இருந்தவற்றையெல்லாம் இல்லாதவர்களுக்கு வழங்கினார். சில நேரங்களில் ஏழைகளிடம் உணவு வாங்கித் தனது பசியைப் போக்கிக் கொள்ளும் அளவுக்கு அவர் வாழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**சிறையில் வாடியோருக்கு மறுவாழ்வு:** புனித ஜோசப் கஃபாசோ, அன்றைய காலக்கட்டத்தில் யாரும் நினைக்காத வகையில், வித்தியாசமாக அதுவும் ஒரு குருவானவர் இப்படியெல்லாம் பணி செய்ய முடியுமா என்று வியக்கும் அளவுக்கு ஒரு புதிய பார்வையில் சிறைகளுக்குச் சென்று கைதிகளுடன், குறிப்பாக மரண தண்டனைக் கைதிகளுடன் தனது நேரத்தைச் செலவிட்டு அவர்களின் ஆறுதலுக்கு வழி செய்தார். மனம் மாற உதவினார். குற்றம் புரிந்தும் பழி சுமத்தப்பட்டும் சிறையில் வாடும் எண்ணற்றவரின் வாழ்வுக்காக உழைப்போர் இறையருள் பெறுகிறார்கள் என்பதை இவரின் பணியின் மூலம் உறுதி செய்யப்பட்டது. இதனால் தானோ "மரண தண்டனைக் கைதிகளின் பாதுகாவளர்" என திருஅவையால் அழைக்கப்படுகிறார்.

**தொன் போஸ்கோவும், கஃபாசோவும்:** சலேசிய சபையை நிறுவிய புனித தொன் போஸ்கோ, குருத்துவ வாழ்வைத் தேர்ந்துக்கொள்ளவும், தெருச் சிறாருக்குப் பணி புரியவும் முக்கிய உந்து சக்தியாக விளங்கியவர் புனித ஜோசப் கஃபாசோ. அதுமட்டுமன்று, ஒப்புரவு அருட்சாதனத்திற்காகத் தன்னை நாடி வந்த குருக்கள், ஆயர்கள், இளவரசர்கள், தொழிலாளர்கள் அனைவருக்கும் நல்ல சிந்தனைகளை வழங்கி அற்புதங்களைக் காணச் செய்தவர். மக்களுக்காக பணியாற்றப் புதிய துறவறச் சபைகளை உருவாக்கவும் அதற்கான உதவிகளும் செய்தார். குறிப்பாக தொன் போஸ்கோவுக்கும், புனித ஜோசப் கஃபாசோவுக்கும் மிக சிறப்பான தொடர்பு உண்டு. தொன் போஸ்கோ தனது குறிப்பேட்டில் இதைப்பற்றி எழுதி வைத்துள்ளார். அதிலிருந்து ஒரு குறிப்பு...

**.....**ஒருமுறை முரியால்தோ பங்கு மக்கள் அன்னை மரியாவின் தாய்மைத் திருநாளை கொண்டாடிக் கொண்டிருக்கையில், பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருந்தன. சிலர் ஆலயத்தை அலங்கரிப்பதிலும்,

குடும்பம் குடும்பமாகச் சிலர் பாடற் பயிற்சியிலும் ஈடுபட்டனர். சிலர் விளையாடிக் கொண்டிருந்தனர், வேறு சிலர் இவற்றையெல்லாம் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தனர். உயரமான, உடல்மெலிந்த, கனிந்தப் பார்வையும் வெள்ளையுள்ளமும் கொண்டு, இந்த விழா நிகழ்ச்சிகள் எதிலும் கலந்து கொள்ளாதவர்போல், கதவில் சாய்ந்தபடி நின்று கொண்டிருந்த ஒருவரை தொன் போஸ்கோ பார்க்கிறார். அப்போது தொன் போஸ்கோவுக்கு வயது 12தான் என்றாலும் அந்த நபரிடம் சென்று பேச வேண்டும் என்ற எண்ணம் அவருள் எழுந்தது.

"தந்தையே திருவிழாவில் என்ன நடக்கிறது என்று நீங்கள் தெரிந்து கொள்ள விரும்பினால், உங்களுக்கு நான் வழிகாட்டியாக உதவ விரும்புகிறேன்" என்றார் சிறுவன் போஸ்கோ. அதற்கு அந்த குருவானவரோ, "உன் வயது என்ன? என்ன படிக்கிறாய்? புதுநன்மை வாங்கிவிட்டாயா? அடிக்கடி ஒப்புரவு அருட்சாதனம் பெறுகிறாயா? மறைக்கல்வி வகுப்புக்கு எங்கு செல்கிறாய்?" என்று போஸ்கோவிடம் தொடர்ந்து கேள்விமேல் கேள்வி கேட்டார். எவ்வித தயக்கமுமின்றி பதிலளித்தார் போஸ்கோ. தனது நன்றியை அவருக்கு தெரிவிக்கும் விதமாக அங்கு நடைபெறும் புதுவித பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளைச் சுற்றிக் காட்டிட அவரை அழைத்தார் போஸ்கோ. "என் இனிய நண்பனே, குருக்களின் பொழுதுபோக்கெல்லாம் ஆலய வழிபாட்டு நிகழ்ச்சிகள்தான். எந்த அளவிற்குப் பக்தியோடு அவற்றை நிறைவேற்றுகிறார்களோ அவ்வளவுக்கு அவர்கள் வெற்றி பெறுவார்கள்" என்றும் "நமது பொழுதுபோக்கெல்லாம் நம் திருமறையை கவனமுடன் பின்பற்றுவதில்தான் அடங்கியுள்ளது. வழிபாட்டு நிகழ்வுகள் என்றுமே புதுமையானவை. அவற்றை கவனமுடன் நிறைவேற்ற வேண்டும். ஆலயம் திறக்கப்பட்டால் உள்ளே சென்று செபிக்கலாம் எனக் காத்துக் கொண்டிருக்கிறேன்" என்று போஸ்கோவிடம் கூறினார்.

ஆனால் தொன் போஸ்கோவிற்கு எப்போதுமே ஒரு துடுக்கான துணிச்சல் உண்டு என்பது நமக்குத் தெரிந்ததுதான். உடனே போஸ்கோ, "தந்தையே நீங்கள் சொல்வது உண்மைதான். இருந்தாலும் விளையாடுவதற்கும் செபிப்பதற்கும் தனித்தனியே குறிப்பிட்ட ஒரு நேரம் இருக்கிறதல்லவா? என்றார். அவர் புன்னகையோடு, "குருமாணவர் தம்மையே இறைவனுக்குக் காணிக்கையாக்குகிறார். ஆன்மாக்களின் மீட்பும் இறைவனின் அதிமிக மகிமையும் தவிர வேறெதுவும் இவ்வுலகில் அவருக்கு முக்கியமல்ல, முக்கியமானதாகவும் இருக்கக் கூடாது" என்று கூறினார். இலட்சியம் நிறைந்த அவரின் கடைசி வார்த்தைகளை தொன் போஸ்கோ என்றுமே மறந்ததில்லை. பேச்சிலும் மூச்சிலும் இறைவனின் ஆவியால் நிரம்பிருந்த அவரைக் கண்டதால், அவரைப்பற்றி அறிந்துக்கொள்ள நினைத்தார் போஸ்கோ. இறுதியில் தம்முடைய நற்பண்புகளால் மக்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்த ஜோசப்

கஃபாசோதான் அவர் என்பதை போஸ்கோ தெரிந்து கொண்டார். தன் வாழ்நாளில் அவரைப் பின்பற்றிய தொன் போஸ்கோ பின்னாளில் ஏழை எளிய இளையோருக்காக ஒரு துறவற சபையை அதாவது சலேசிய சபையை நிறுவிய அளவிற்கு அவர்களது உறவின் ஒன்றிப்பு இருந்ததை நாம் பார்க்கின்றோம்.

## திருச்சபைச் செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் ச.ச.,

### உண்மை, நன்மை, நீதிக்குப் பணியாற்றும் ஊடகங்கள் தேவை

நல்ல உண்மையான தகவல்களை வெளியிடுவது, மக்களாட்சியை ஊக்குவிப்பதற்கும், சுதந்திரமான தேர்தல்களுக்கும் உதவுகின்றது. உண்மை, நன்மை, மற்றும் நீதிக்குப் பணியாற்றுகின்ற சுதந்திரமான ஊடகவியலும், சந்திப்புக் கலாச்சாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு உதவுகின்ற ஊடகவியலும், நமக்குத் தேவைப்படுகின்றன என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார். சுதந்திர ஊடகவியல் உலக நாள் கடைப்பிடிக்கப்பட்டதை முன்னிட்டு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் டுவிட்டர் செய்தியில், எத்தகைய ஊடகவியல் நமக்குத் தேவைப்படுகின்றது என்ற, தன் எண்ணங்களைப் பதிவு செய்துள்ளார். மேலும், ஆசியாவில் ஊடகவியலாளர் தொடர்ந்து அச்சுறுத்தப்படுகின்றனர் எனவும், ஊடகவியல் சுதந்திரம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது எனவும், ஆசிய திருஅவைத் தலைவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். 2018ம் ஆண்டில், பணியின்போது, ஏறத்தாழ நூறு ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் மற்றும் நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டுள்ளனர். 1994ம் ஆண்டுக்கும், கடந்த ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில், 1307 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று யுனெஸ்கோ அறிவித்துள்ளது.

### முஸ்லீம் சமுதாயத்தோடு உறவுகளை வலுப்படுத்தும் கூட்டத்தில்...

ஆப்ரிக்கத் தலத்திருஅவை உறுப்பினர்களிடம் விளங்கும் அர்ப்பணம், அம்மக்களின் ஒற்றுமைக்கு விதையாகவும், ஆப்ரிக்க கண்டத்திற்கு நம்பிக்கையாகவும் விளங்க இம்மாதம் செபிப்போம் - திருத்தந்தை. ஆப்ரிக்காவில் அமைந்துள்ள தலத்திருஅவை, ஒற்றுமையின் விதையாக விளங்கவேண்டும் என்பதை மையப்படுத்தி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் மே மாத செபக்கருத்தை வெளியிட்டுள்ளார். ஆப்ரிக்காவில் நிலவும் இன, மொழி மற்றும் பழங்குடியின வேறுபாடுகளை வெல்வதற்கு, வேற்றுமையில் ஒற்றுமை என்ற கருத்தை வளர்க்க வேண்டும் என்ற சொற்களுடன், திருத்தந்தை தன் செபக்கருத்தை ஆரம்பித்துள்ளார்.

**ஆப்ரிக்காவின் ஒற்றுமைக்காக செபிக்க திருத்தந்தை அழைப்பு**

ஆப்ரிக்கத் தலத்திருஅவை உறுப்பினர்களிடம் விளங்கும் அர்ப்பணம், அம்மக்களின் ஒற்றுமைக்கு விதையாகவும், ஆப்ரிக்க கண்டத்திற்கு நம்பிக்கையாகவும் விளங்க இம்மாதம் செபிப்போம் - திருத்தந்தை. ஆப்ரிக்காவில் அமைந்துள்ள தலத்திருஅவை, ஒற்றுமையின் விதையாக விளங்கவேண்டும் என்பதை மையப்படுத்தி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் மே மாத செபக்கருத்தை வெளியிட்டுள்ளார். ஆப்ரிக்காவில் நிலவும் இன, மொழி மற்றும் பழங்குடியின வேறுபாடுகளை வெல்வதற்கு, வேற்றுமையில் ஒற்றுமை என்ற கருத்தை வளர்க்க வேண்டும் என்ற சொற்களுடன், திருத்தந்தை தன் செபக்கருத்தை ஆரம்பித்துள்ளார்.

### திருத்தந்தையின் செபக்கருத்து

உரையாடலையும், ஒப்புரவையும் உருவாக்க உழைத்துவரும் அருள்சகோதரிகள், அருள்பணியாளர்கள், பொதுநிலையினர் மற்றும் மறைப்பரப்புப் பணியாளர்கள் அனைவருக்கும் தான் நன்றி கூறுவதாக திருத்தந்தை கூறியுள்ளார். ஆப்ரிக்கத் தலத்திருஅவையின் உறுப்பினர்களிடம் விளங்கும் அர்ப்பணம், அம்மக்களின் ஒற்றுமைக்கு விதையாகவும், ஆப்ரிக்கக் கண்டத்திற்கு நம்பிக்கையாகவும் விளங்க இம்மாதம் செபிப்போம் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் செபக்கருத்தை நிறைவு செய்துள்ளார்.

### 17.6 விழுக்காடு கத்தோலிக்கர்

2018ம் ஆண்டில் கத்தோலிக்க உலகைக் குறித்து, வத்திக்கான் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களின்படி, உலகக் கத்தோலிக்க மக்கள் தொகையில், 17.6 விழுக்காட்டினர், ஆப்ரிக்கக் கண்டத்தில் வாழ்கின்றனர் என்பதை திருத்தந்தையின் செபக்கருத்துக்களை ஒவ்வொரு மாதமும் வெளியிட்டுவரும் செபத்தின் திருத்தூதுப்பணி என்ற அமைப்பு கூறியுள்ளது. இயேசு சபை துறவிகளால், 1844ம் ஆண்டு உருவாக்கப்பட்ட செபத்தின் திருத்தூதுப்பணி என்ற அமைப்பு, தற்போது 98 நாடுகளில், 3 கோடியே 50 இலட்சம் கத்தோலிக்கர்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது.

### லியோனார்தோ தா வின்சியின் புதிய தபால்தலை

உலகப் புகழ்பெற்ற இத்தாலியக் கலைஞர், லியோனார்தோ தா வின்சி அவர்கள் மரணமடைந்ததன் 500ம் ஆண்டையொட்டி, வத்திக்கான் தபால்துறை, ஒரு புதிய தபால் தலையை வெளியிடுகிறது. 1452ம் ஆண்டு இத்தாலியின் பிளாரன்ஸ் நகருக்கு அருகே வின்சி என்னுமிடத்தில் பிறந்த லியோனார்தோ அவர்கள், 1519ம் ஆண்டு மே 2ம் தேதி, தன் 67வது வயதில் காலமானார். ஓவியராக, சிற்பியாக, கட்டடக் கலைஞராக, அறிவியலாளராக, இசைக் கலைஞராக, பல்வேறு திறமைகளுடன் வாழ்ந்த

லியோனார்தோ அவர்களை, "ஓர் உலக மாமேதை" என்று வரலாற்று ஆசிரியர்கள் பலர் குறிப்பிட்டுள்ளனர். இயேசுவின் இறுதி இராவுணவு ஓவியம், மோனா லிசா ஓவியம், Salvator Mundi, அதாவது, உலகின் மீட்பர் என்ற இயேசுவின் ஓவியம் ஆகியவை லியோனார்தோ அவர்கள் தீட்டிய ஓவியங்களில் உலகப் புகழ்பெற்றவையாகத் திகழ்பவை.

## மனித மாண்பை மதிப்பது, ஒருங்கிணைந்த மனித வளர்ச்சிக்கு அவசியம்

வளர்ச்சிக்குரிய திட்டங்களில், மனிதர் மையப்படுத்தப்பட வேண்டும். ஒருங்கிணைந்த மனித முன்னேற்றம், ஒரு சிலருக்கு மட்டுமல்லாமல், அனைவருக்கும் கிடைப்பதற்கு வழியமைக்கப்பட வேண்டும் - பேராயர் யுர்கோவிச். முனிதரின் வளர்ச்சி, பொருளாதாரம் அல்லது வல்லுநர்கள் சார்ந்த விவகாரம் மட்டுமன்று, அது ஒவ்வொரு மனிதரும் சுதந்திரமாகவும், கடமையுணர்வுடனும் ஆற்றப்படுவதற்கு விடுக்கப்படும் அழைப்பாகும் என்று, திருப்பீட உயர் அதிகாரி ஒருவர், ஜெனிவாவில் நடைபெற்ற கூட்டத்தில் கூறினார். ஜெனிவாவிலுள்ள ஐ.நா. அலுவலகங்கள் மற்றும் பன்னாட்டு அமைப்புகளில், திருப்பீடத்தின் நிரந்தரப் பிரதிநிதியாகப் பணியாற்றும் பேராயர் இவான் யுர்கோவிச் அவர்கள், "வளர்ச்சியடைவதற்கு உரிமை" என்ற தலைப்பில் நடைபெற்ற, ஐ.நா. கூட்டத்தில் உரையாற்றியபோது மனித உரிமையாக வளர்ச்சியடைவதற்குரிய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று கூறினார். மனித மாண்பை மதிப்பது, நீடித்த மற்றும் நிலையான ஒருங்கிணைந்த மனித முன்னேற்றத்தை ஊக்குவிப்பதற்கு, மற்ற எல்லாவற்றையும்விட அவசியமானதாகும் என்று வலியுறுத்திய பேராயர் யுர்கோவிச் அவர்கள், 2030ம் ஆண்டின் வளர்ச்சித்திட்ட இலக்கை எட்டுவதற்கு நாம் விரும்பினால், இப்பூமி மற்றும் ஏழைகளின் அழுகுரலுக்குச் செவிமடுக்க, அதிகமதிகமாக உலகினர் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

## பெல்காம் மறைமாவட்டத்தின் புதிய ஆயர் நியமனம்

கார்வார் மறைமாவட்டத்தின் ஆயராகப் பணியாற்றிவரும், டெரெக் பெர்னாண்டஸ் அவர்களை, பெல்காம் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மே 1 அன்று நியமித்துள்ளார். 1954ம் ஆண்டு பிறந்த டெரெக் அவர்கள், 1979ம் ஆண்டு, பெல்காம் மறைமாவட்ட அருள்பணியாளராக திருநிலைப்படுத்தப்பட்டு, பின்னர், 2007ம் ஆண்டு ஏப்ரல் 20ம் தேதி, அதே மறைமாவட்டத்தின் ஆயராக அருள்பொழிவு செய்யப்பட்டார். இவருக்கு முன்னர், பெல்காம் மறைமாவட்டத்தின் ஆயராகப் பணியாற்றிவந்த பீட்டர் மச்சாடோ அவர்கள், 2018ம் ஆண்டு மார்ச் 19ம் தேதி பெங்களூருவுக்கு பணிமாற்றம் பெற்றதிலிருந்து பெல்காம் மறைமாவட்டம் கடந்த 14 மாதங்களாக ஆயரின்றி இருந்தது.

## சுடர் வாசகர் போட்டி - 59 சரியான விடைகள்

1. திருத்தூதர் புனித யாக்கோபு
2. "இறைவனின் கொடை"
3. அமைதியில் செயல்படு
4. தொன் பெஸ்தரீனோ
5. கொன்சொலாத்தா துறவு சபை, 80வயது
6. புனித திருமுழுக்கு யோவான், புனித அகுஸ்தின், புனித நிக்கோலாஸ்
7. புனித தோமினிக் சாவியோ
8. திருத்தந்தை 12ஆம் பத்திநாதர், 1955
9. புனித லூயிஸ் ஓரியோனே
10. மரியன்னையின் பாடல்
11. 34 மொழிகளில்
12. புனித தொன்போஸ்கோ
13. புனித லெயனார்து முரியால்தோ
14. திருத்தந்தை 11ஆம் பத்திநாதர், புனித தோமினிக் சாவியோவை பற்றி
15. 87 வயதில் சிலுவையில் கட்டப்பட்டு, கல்லெறிந்து கொல்லப்பட்டார்.

**குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்**

J. Nava Irudayamary, Kolappalur

Sr. Ophiliya, Kovai

A. Irudaya Mary, Tiruppur

## சுடர் வாசகர் போட்டி - 60

1. அருளாளர் ஸ்தேவான் சாந்தோர் எந்த துறையில் வல்லுநர்?
2. "மரியா இறைவனின் தாய்" என்ற கோட்பாட்டை வெளியிட்டவர் யார்?
3. புனித மார்கரேட் மேரி அலகாக் எந்த சபையை சார்ந்தவர்?
4. சிறிய புனிதர் என்று அழைக்கப்பட்ட புனிதர் யார்?
5. அபிதாபியில் திருத்தந்தை பிரான்சிஸ் சந்தித்த முஸ்லீம் பெரிய குரு யார்?
6. ஆண்டவர் இயேசு திருமுழுக்கு யோவானுக்கு கொடுத்த சிறப்புப் பெயர் என்ன?
7. ஆண்டவரின் பாதுகாப்பை எந்த திருப்பாடலில் தெள்ளத் தெளிவாக காணமுடியும் என்று ஆசிரியர் கூறுகிறார்?
8. "ஆறுதலின் மகன்" இது யாருடைய பெயரின் பொருள்?
9. "ஆண்டவர் இயேசுவுக்காக துன்புறுவதே எனது விருப்பம். அதன் வழியாகவே நான் மீட்படைவேன்" கூறியது யார்?
10. திருவிவிலியத்தை எழுதியவர்கள் யாருடைய ஏவுதலால் எழுதினார்கள்?
11. மரணதண்டனை கைதிகளின் பாதுகாவலர் யார்?
12. புனித பவுல் தலைவெட்டப்பட்ட இடம் எது?
13. "அழியா நாவுடைய புனிதர்" என்று பெயர் பெற்ற புனிதர் யார்?
14. தனிப்பட்டப் பணிக்காக பர்னபாவுடன் யாரை ஒதுக்கி வைக்க ஆண்டவர் கூறுகிறார்?
15. அருளாளர் ஸ்தேவான் சாந்தோர் எந்த ஆண்டு கைது செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்டார்?

**அன்பு நிறை வாசகர்களே!**

இந்த மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை ஜூன் 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று

பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும்.
(சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

புனித தோமா இந்தியாவின் திருத்தூதர்
புனித மரிய கொரற்றி
அருளாளர் மரிய ரொமேரோ மெனேஸஸ்
பொதுக்காலம் 14ம் ஞாயிறு
புனித பெனடிக்ட்
பொதுக்காலம் 15ம் ஞாயிறு
கார்மேல் மலை புனித கன்னி மரியா
பொதுக்காலம் 16ம் ஞாயிறு
புனித மகதலா மரியா
புனித யாக்கோபு, திருத்தூதர்
புனிதர்கள் சுவக்கின் அன்னா
பொதுக்காலம் 17ம் ஞாயிறு
புனித மார்த்தா
புனித லொயோலா இஞ்ஞாசியார்

### பகுதி 2: விசுவாசத்தில் வளர...

சலேசியரின் பாதுகாவலர் புனித தோமா
மரியாளின் பெற்றோர் சுவக்கின் அன்னா
அருளாளர் மரிய ரொமேரோ மெனேஸஸ் வாழ்வு தரும் பாடம்
திருச்சபை செய்திகள்

**தீபகச் சுடர்**

**அன்பு வாசகர்களே!**

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ. 100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.
தொலைப்பேசி: 044-26428162.

பெயர்:.....................................
முகவரி:..................................
..........................................
..........................................
..........................................

## ஜூன் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| **1** | சனி | புனித ஜஸ்டின் | திப 18: 23-28 | யோவா 16: 23-28 |
| **2** | **ஞா** | **ஆண்டவருடைய விண்ணேற்றம்** | I. திப 1: 1-11<br>II. எபி 9: 24-28, 10:19-23 | லூக் 24: 46-53 |
| **3** | தி | புனிதர்கள் சார்லஸ், லவாங்காவும் தோழர்களும் | திப 19: 1-8 | யோவா 16: 29-33 |
| 4 | செ | புனித பிரான்சிஸ் கராச்சியோலோ | திப 20: 17-27 | யோவா 17: 1-11 |
| 5 | பு | புனித போனிப்பாஸ் | திப 20: 28-38 | யோவா 17: 11-19 |
| 6 | வி | புனித நார்பெர்ட் | திப 22: 30, 23: 6-11 | யோவா 17: 20-26 |
| 7 | வெ | | திப 25: 13-21 | யோவா 21: 15-19 |
| 8 | ச | அருளாளர் மரியம் தெரசியா | திப 28: 16-20, 30-31 | யோவா 21: 20-25 |
| **9** | **ஞா** | **தூய ஆவி ஞாயிறு** | I. திப 2: 1-11<br>II. உரோ 8: 8-17 | யோவா 14: 15-16, 23-26 |
| 10 | தி | மரியா திருஅவையின் தாய் | 2கொரி 1: 1-7 | மத் 5: 1-12 |
| 11 | செ | புனித பர்னபா | திப 11: 21-26, 13: 1-3 | மத் 10: 7-13 |
| 12 | பு | புனித அருளப்பர் சஹாகுன் | 2கொரி 3: 4-11 | மத் 5: 17-19 |
| 13 | வி | பதுவா நகர்ப் புனித அந்தோணியார் | 2கொரி 3: 15-4: 1,3-6 | மத் 5: 20-26 |
| 14 | வெ | புனித முதலாம் மெத்தோடியஸ் | 2கொரி 4: 7-15 | மத் 5: 27-32 |
| 15 | ச | | 2கொரி 5: 14-21 | மத் 5: 33-37 |
| **16** | **ஞா** | **தூய்மை மிகு மூவொரு கடவுள்** | I. நீதி 8: 22-31<br>II. உரோ 5: 1-5 | யோவா 16: 12-15 |
| 17 | தி | புனித கிரகோரி பார்பரிகோ | 2கொரி 6: 1-10 | மத் 5: 38-42 |
| 18 | செ | புனிதர்களான மாற்கு மற்றும் மர்சீலியன் | 2கொரி 8:1-9 | மத் 5: 43-48 |
| 19 | பு | புனித ரோமுவால்டு | 2கொரி 9: 6-11 | மத் 6: 1-6, 16-18 |
| 20 | வி | புனித சில்வேரியஸ் | 2கொரி 11: 1-11 | மத் 6: 7-15 |
| 21 | வெ | புனித அலோசியஸ் கொன்சாகா | 2கொரி 11: 18, 21-30 | மத் 6: 19-23 |
| 22 | ச | புனிதர் தாமஸ் மூர், புனித பவுலினுஸ் | 2கொரி 12: 1-10 | மத் 6: 24-34 |
| **23** | **ஞா** | **கிறிஸ்துவின் தூய்மைமிகு திருஉடலும் திருஇரத்தமும்** | I. தொநூ 14: 18-20<br>II. 1கொரி 11: 23-26 | லூக் 9: 11-17 |
| 24 | தி | **புனித திருமுழுக்கு யோவானின் பிறப்பு** | I. எசா 49: 1-6<br>II. திப 13: 22-26 | லூக் 1: 57-66, 80 |
| 25 | செ | | தொநூ 13: 2, 5-18 | மத் 7: 6. 12-14 |
| 26 | பு | | தொநூ 15: 1-12. 17-18 | மத் 7: 15-20 |
| 27 | வி | அலெக்சாந்திரியா நகர் புனித சிரில் | தொநூ 16: 1-12. 15-16 | மத் 7: 21-29 |
| 28 | வெ | **இயேசுவின் திருஇதயப் பெருவிழா** | I. எசா 34: 11-16<br>II. உரோ 5: 5-11 | லூக் 15: 3-7 |
| 29 | ச | **புனிதர்கள் பேதுரு, பவுல்** | I. திப 12: 1-11<br>II. 2திமொ 4: 6-8, 17-18 | மத் 16: 13-19 |
| **30** | **ஞா** | **பொதுக்காலம் பதிமூன்றாம் ஞாயிறு** | I. 1அர 19: 16,19-21<br>II. கலா 5: 1,13-18 | லூக் 9: 51-62 |